# திருக்குர்ஆன் நற்செய்தி மலர்

-சமூக சீர்திருத்த மாத இதழ்-

THIRU QURAN NARCHEYDHI MALAR - FEBRUARY 2020

மலர்: 13 இதழ்: 5 பிப்ரவரி 2020 விலை: ரூ. 10



## உலக பயங்கரவாதமும் உண்மைகளும்


ஆயத விற்பனை முதலைகளுக்காக..

– உருவாக்கப்படும் போர்முனைகள்!

– மக்கள் மீது திணிக்கப்படும் வரிச்சுமை!

- ஆதிக்கவாதிகள் இஸ்லாத்தை ஏன் எதிர்க்கிறார்கள்?
- தீமைகளைத் தடுக்காமல் அமைதி இல்லை!
- சமூக அமைதிக்கு சமத்துவமே அடிப்படை!
- பிரிவினைவாதத்திற்கும் பிரித்தாளும் சூழ்ச்சிக்கும் சாவுமணி!

## The Sun




# சூரியன் ஒளி இழக்கும்போது...

**(உலக முடிவுக்காகச்) சூரியனின் பிரகாசம் மங்க வைக்கப்படும்போது, (திருக்குர்ஆன் 81:1)**

உலக முடிவு நிகழ்வதற்கு முன்னால் நடக்கக்கூடிய நிகழ்வுகளையும் அறிகுறிகளையும் கூறி மனிதனை எச்சரிக்கும் ஒரு திருக்குர்ஆன் அத்தியாயத்தின் முதல் வசனத்தைத் தான் நீங்கள் மேலே காண்கிறீர்கள். இந்த வசனத்தின் மூலத்தில் 'இதஷ்ஷம்ஸு குவ்விரத்' என்று வருகிறது. இதில் ஷம்ஸ்' என்றால் சூரியன். 'குவ்விரத்' என்ற வார்த்தைக்கு 'அது இருட்டாகிவிடும்', 'அதன் ஒளி போய்விடும்', 'கீழே வீசப்படும்'. 'அதன் ஒரு பகுதி அதன் மற்றொரு பகுதியாக மடிக்கப்படும்' (தொடர்ச்சி 10 ஆம் பக்கம்)

அளவற்ற அருளாளனும் நிகரற்ற அன்புடையோனுமாகிய

அல்லாஹ்வின் திருப்பெயரால்...

# திருக்குர்ஆன் நற்செய்தி மலர்

# THIRU QURAN NARCHEYDHI MALAR

**மலர்: 13 இதழ்: 5 பிப்ரவரி 2020 விலை: ரூ. 10**

## பொருளடக்கம்

நற்குண நாயகர் நம் நபிகளார் -2
இஸ்லாமியர்களை மிரட்டுவதும் விரட்டுவதும் ஏன்? -5
சமூக மாற்றத்தை உண்டாக்கும் இஸ்லாமிய நம்பிக்கைகள் -7
பரீட்சைக் கூடத்தில் சோதனைகள் சகஜமே -9
சூரியன் ஒளி இழக்கும்போது - 10
ஆதிக்கவாதிகள் இஸ்லாத்தை ஏன் எதிர்க்கிறார்கள்? -12
உலக பயங்கரவாதமும் உண்மைகளும் -14
நபிகளார் கூறிய நல்லுபதேசங்கள் -17
தீமைகளைத் தடுக்காமல் அமைதி என்பது இல்லை -18
சமூக அமைதிக்கு சமத்துவமே அடிப்படை -20
பிரிவினைவாதத்திற்கும் பிரித்தாளும் சூழ்ச்சிக்கும் சாவுமணி! -22

**வாசகர்கள் கவனத்திற்கு...**

- இவ்விதழைப் பெறவிரும்பும் அன்பர்கள் தங்களது தெளிவான விலாசத்தை **9886001357** என்ற எண்ணுக்கு **SMS** அனுப்பவேண்டும்.
- மாற்று மத அன்பர்களுக்கு இவ்விதழ் ஒரு வருடம் வரை அன்பளிப்பாக அனுப்பி வைக்கப்படும். தொடர்ந்து பெறவிரும்பினால் அவர்கள் **SMS** மூலம் **RESEND QNM** என்று டைப் செய்து அனுப்பவேண்டும். சந்தா அனுப்பத் தேவையில்லை.
- முஸ்லிம் அன்பர்களுக்கு 4 மாதம் வரை இவ்விதழ் இலவசமாக அனுப்பிவைக்கப்படும். தொடர்ந்து பெறவிரும்புவோர் சந்தா அனுப்ப வேண்டும்.
- ஓராண்டு சந்தா **Rs.120-**
- இதழ் மொத்தமாக வேண்டுவோர், சந்தாதாரர்கள் குறைபாடுகள் தொடர்பு எண்: **09845373775**

Published from:

**House of Peace,**
PO Box no. 1726, No.501, 3rd cross, Syed Block,
AS palya Bangalore 560017
**Ph. 9886001357 email: amkasim@yahoo.com**
**www.quranmalar.com www.waytoparadise.in**

# நற்குண நாயகர் நம் நபிகளார்

இறைவனின் இறுதித்தூதர் முஹம்மது நபிகளாரின் நற்குணங்களில் சிலவற்றை வெளிப்படுத்தும் சில நிகழ்வுகளை அன்னாரின் வரலாற்றுப் பதிவுகளில் இருந்து காணலாம்.

### கொள்கைக்காக ஊர்விலக்கு, பட்டினி


● அண்ணலாரின் அழைப்பை ஏற்று ஆரம்பத்தில் இறை மார்க்கத்தை ஏற்றவர்கள் ஏழை-எளிய மக்களே. இக்கால கட்டத்தில் சத்திய மறுப்பாளர்கள் இறை விசுவாசிகளை ஊர் விலக்கு செய்து, மூன்றாண்டுகள் மக்காவில் அபுதாலிப் கணவாயில் தங்க வைத்தார்கள். அவர்களோடு மக்கள் தொடர்பு கொள்ளவோ உணவளிக்கவோ கூடாது என்று சட்டம் இயற்றி தடை செய்தார்கள். இச்சூழ்நிலையில் இறை விசுவாசிகள் இலைகளையும், தழைகளையும் உண்ணும் அளவுக்கு வறுமை அவர்களை வாட்டியது.

● நபிகளாரின் வீட்டில் மூன்று நாட்கள் தொடர்ந்து அடுப்பெரியும் நிலை இல்லாத அளவுக்கு வறுமை கடுமையாக இருந்தது.

● ஒரு போரின்போது பசியின் காரணமாக அண்ணலார் தன் அடி வயிற்றில் கற்களைக் கட்டிக் கொண்டு பணியாற்றினார்கள்.

### உழைப்பின் சிறப்பை உரைத்தவர்

● “ஒரு மனிதன் யாசிப்பதைவிட ஒரு கயிற்றை எடுத்துக் கொண்டு காட்டுக்குச் சென்று விறகு வெட்டி, அதை விற்று வாழ்க்கை நடத்துவது சிறந்தது” என உழைப்பின் உயர்வை உணர்த்திக் காட்டி யாசிப்பதை வெறுத்தார் அவர்.



● “எந்த இறைத் தூதரும் ஆடு மேய்க்காமல் இருந்ததில்லை” என நபி(ஸல்) அவர்கள் கூற, அவர்களின் தோழர்கள், “இறைத் தூதர் அவர்களே! தாங்களுமா?” என்று கேட்டார்கள். அப்போது நபி(ஸல்) அவர்கள், “ஆம். மக்காவாசியிடம் சில கீராத் கூலிக்காக நானும் ஆடு மேய்ப்பவனாக இருந்தேன்” எனக் கூறினார்கள்


### கடன் வாங்கிய ஜனாதிபதி

● நபி(ஸல்) அவர்கள் ஒரு மனிதரிடம் கடன் வாங்கியிருந்தார். அம்மனிதர் கடனைத் திருப்பிக் கேட்கையில் நபியிடம் கடுஞ்சொற்களைப் பயன்படுத்தினார். அப்போது அருகிலிருந்த நபித் தோழர்கள் அவரைத் தாக்க முயன்றனர். உடனே நபி (ஸல்) அவர்கள் தம் தோழர்களை நோக்கி, ”அவரை விட்டுவிடுங்கள். கடன் கொடுத்தவருக்குப் பேசும் உரிமை உண்டு” எனக் கூறி, அக்கடனை அழகிய முறையில் திருப்பிச் செலுத்திவிட்டு, ”வாங்கிய கடனை அழகிய முறையில் திருப்பிச் செலுத்துபவரே உங்களில் சிறந்தவர்” என கூறினார்கள் நபிகள் நாயகம்.

## கல்லடி வாங்கியும் பழிவாங்காத தலைவர்

● மக்காவின் அருகே உள்ள தாயி∴ப் நகர மக்களை இறைமார்க்கத்தின் பக்கம் அழைத்தபோது அம்மக்கள் அண்ணலாரை கல்லால் எறிந்து பலமாகக் காயப்படுத்தினார்கள். இரத்தம் சொட்ட சொட்ட இறைவனிடம் அவர் பிரார்த்தித்த போது இறைவனின் வானவர்கள் அவரிடம் வந்தார்கள். “நபியே, நீங்கள் அனுமதித்தால் இதோ இந்த இரு மலைகளுக்கு இடையே உள்ள இந்த ஊரை நசுக்கி அழிக்க எங்களால் முடியும்” என்றார்கள். ஆனால் அந்த வேளையிலும் அம்மக்களைப் பழிவாங்க நபிகளார் சம்மதிக்கவில்லை.

**மாறாக “இம்மக்கள் அறியாதவர்களாக இருக்கின்றார்கள். இவர்கள் நேர் வழி பெறாவிட்டாலும் இவர்களின் சந்ததிகள் நேர்வழி பெறக் கூடும்” என எண்ணி அம்மக்களுக்காக இறைவனிடம் இறைஞ்சினார் அண்ணலார்.**



● மக்காவில் இருந்து அங்கிருந்த ஆதிக்க சக்திகளால் வெளியேற்றப்பட்ட நபிகள் நாயகமும் தோழர்களும் இஸ்லாம் வளர்ந்து ஆதிக்கம் பெற்ற பின்னர் பத்து வருடங்களுக்குப் பின்னர் மீண்டும் மக்காவுக்கு திரும்பி வந்து அதை வெற்றி கொண்டார்கள். அந்த நிகழ்வின் போது நபிகளாருக்கும் அவரது சகாக்களுக்கும் சொல்லொணா துன்புறுத்தல் செய்த எவரையும் பழிவாங்காது அனைத்து மக்களுக்கும் பொது மன்னிப்பு அளித்தார் நபிகளார்.

## பொதுப்பணத்தை தீண்டாத ஆட்சித்தலைவர்

● ஒரு முறை பள்ளிவாசலில் பொதுச் சொத்தாக குவிந்துக் கிடந்த பேரீத்தம் பழங்களில் ஒன்றை நபி அவர்களின் பேரர் ஹஸன் எடுத்து தன் வாயில் வைத்துவிட்டார். உடனே தன் பேரரை நோக்கி, “”சீ! சீ! அதைத் துப்பிவிடு” என்று கூறிவிட்டு, ”தர்மப் பொருளை நாம் உண்ணக் கூடாது என்பதை நீ அறியவில்லையா?” என்று கேட்டார்கள். பொதுச் சொத்தை உண்பதை தம் குடும்பத்தினர் மட்டுமல்ல, பின்னர் வரக்கூடிய தம் தலைமுறையினர் அனைவருக்கும் தடை செய்தார் அண்ணலார் அவர்கள். இன்றும் கூட நபிகளாரின் தலைமுறையினர் ஜகாத் என்ற பொது நிதியில் இருந்து தர்மம் பெறுவதில் இருந்து தடுக்கப்பட்டுள்ளார்கள்.

## இப்படியும் ஒரு வள்ளலா?

கேட்கும் மக்களுக்கு வாரி வழங்கும் வள்ளலாக அண்ணலார் விளங்கினார். ஒரு முறை அழகுற நெய்யப்பட்ட சால்வை ஒன்றை ஒரு பெண்மணி அண்ணலாருக்கு அன்பளிப்பாக வழங்கினார். அந்தச் சால்வையை அண்ணலார் அவர்கள் வேட்டியாக அணிந்திருந்தார்.

அதனைக் கண்ட நபித்தோழர் ஒருவர் அதைத் தனக்கு வழங்குமாறு கேட்டார். உடனே நபி(ஸல்) அவர்கள் வீட்டினுள் சென்று அதைச் சுருட்டி எடுத்து, கேட்டவரிடம் கொடுத்து அனுப்பினார்.

**கடுஞ்சொல் அறியாதவர்**

● ஒரு முறை நபி அவர்களிடம் ஒரு மனிதர் வீட்டிற்குள் வர அனுமதி கேட்டார். "இவர் அக்கூட்டத்தாரில் மிகவும் கெட்டவர்' எனக் கூறிய நபிகள், அவர் உள்ளே வர அனுமதி கொடுத்தார். அவர் வீட்டினுள் வந்து உட்கார்ந்தபோது, அவரிடம் நபியவர்கள் முக மலர்ச்சியுடனும், கனிவுடனும் நடந்து கொண்டார். அந்த மனிதர் புறப்பட்டுச் சென்றபின் நபி அவர்களிடம் துணைவியார் ஆயிஷா அவர்கள், "இறைத்தூதர் அவர்களே! இந்த மனிதர் இப்படிப்பட்டவர் எனத் தெரிந்தும் அவரிடம் முக மலர்ச்சியுடனும், கனிவுடனும் நடந்து கொண்டீர்களே' என்று கேட்டார். அப்போது நபி (ஸல்) அவர்கள், "ஆயிஷாவே! நான் யாரிடமும் கடுமையாக நடந்து கொண்டதை எப்போதேனும் நீ கண்டதுண்டா?" என்று மொழிந்தார்.

● நபி(ஸல்) அவர்களிடம் பத்து ஆண்டுகளுக்கு மேல் பணியாற்றிய அனஸ் பின் மாலிக் என்பவர், "அண்ணலார் என்னை ஒரு போதும் திட்டியதோ, கடிந்து பேசியதோ கிடையாது" எனச் சான்று பகர்கிறார்.

**நம்பிக்கைக்கு உரியவர்**

● மாற்றுச் சமுதாயத்தவர்கள்கூட தங்களின் பொருட்களை அண்ணலாரிடம் அடைக்கலமாகக் கொடுத்திருந்தனர். மக்காவைத் துறந்து மதீனாவிற்கு குடியேறிய போது தன்னிடம் ஒப்படைக்கப்பட்டிருந்த அடைக்கலப் பொருட்களை உரிமையாளர்களிடம் திருப்பி ஒப்படைக்கும் பொறுப்பை தனது மருமகன் அலி (ரலி) அவர்களிடம் கொடுத்துவிட்டுத்தான் சென்றார்கள் நபிகளார்.

**விரோதிகளாலும் குறைகூற முடியாத செம்மல்**

● நபி அவர்கள் பொய் சொல்வதை மிகவும் கடுமையாக வெறுத்தார். அவரின் கொடிய விரோதி அபு ஜஹ்ல் கூட, "நான் உம்மைப் பொய்யர் என்று கூறமாட்டேன். நீர் கொண்டு வந்த மார்க்கத்தைத்தான் மிகவும் வெறுக்கிறேன்" என்றான்.

**இறைவனின் நற்சான்றிதழ் பெற்ற மகான்**

● **நபியே! நிச்சயமாக நீர் உயர்ந்த மகத்தான நற்குணம் உடையவராக இருக்கின்றீர். (திருக்குர்ஆன் 68:4)**

● **இறைவன் மீதும், இறுதி நாளின் மீதும், ஆதரவு வைத்து இறைவனை அதிகம் தியானிப்போருக்கு நிச்சயமாக இறைவனின் தூதரிடம் ஓர் அழகிய முன்மாதிரி உங்களுக்கு இருக்கிறது. (திருக்குர்ஆன் 33:21)**

# இஸ்லாமியர்களை மிரட்டுவதும் விரட்டுவதும் ஏன்?

உலக மக்கள்தொகையின் கால்பங்குக்கும் அதிகமான மக்களால் பின்பற்றப்படும் ஒரு வாழ்வியல் கொள்கை இஸ்லாம். இது இன்று வெகு வேகமாகப் பரவி வருகிறது என்பதைப் புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன (www.pewresearch.org) மறுபுறம் உலகின் பல நாடுகளில் இஸ்லாத்தை ஏற்ற மக்கள் பல்வேறு விதமான அல்லல்களுக்கும் தொல்லைகளுக்கும் ஆளாக்கப்பட்டு வருவதையும் அறிவோம். இன்று இந்தியாவை ஆண்டுகொண்டு இருக்கும் அரசும் இஸ்லாமியர்களுக்கு குடியுரிமை மறுப்பதில் முனைப்பு காட்டுவதையும் அதற்கெதிராக நாடெங்கும் போராட்டங்கள் நிகழ்ந்து வருவதையும் நாம் காண்கிறோம். இந்நாட்டில் தலைமுறை தலைமுறையாக வாழ்ந்து வந்தவர்களுக்கும் கூட அவர்கள் இஸ்லாமியர் என்ற ஒரே காரணத்துக்காக சட்டங்களும் விதிமுறைகளும் கடினமாக்கப்பட்டு ஒதுக்கப்படும் நிலை உருவாகி உள்ளதையும் நாம் அறியமுடிகிறது.

இன்னும் இந்நாட்டுக்கு வெளியேயும் இஸ்லாமியர்கள் வேறு விதமாக ஆதிக்க சக்தியினரின் தொல்லைகளை சந்தித்து வருகிறார்கள்.

● பர்மாவில் ரோஹிங்கியா முஸ்லிம்களின் குடியிருப்புகள் தீக்கிரையாக்கப் பட்டதையும் அவர்கள் அகதிகளாக வெளியேற்றம் செய்யப்பட்டதையும் அறிவோம்.

● சீனாவில் உய்கூர் முஸ்லிம்களை அமைதியாக வாழவிடாது அவர்களைத் தடுப்பு முகாம்களில் அடைத்து அங்கு மூளைச்சலவை செய்கிறார்கள். அவர்களுக்கு தொழுகை நடத்தத் தடை, ரமலான் மாதம் கூட நோன்பு வைக்கத் தடை, திருக்குர்ஆன் படிக்கத் தடை என பல பலவந்தங்களும் திணிக்கப்பட்டு உள்ளன.

● முஸ்லிம்கள் அதிகமாக வாழும் வளைகுடா நாடுகள் தொடர்ந்து போர்களுக்கு உள்ளாக்கப்பட்டு வருவதையும் அங்கு வாழ்ந்த மக்கள் சொந்த நாடுகளிலிருந்து அகதிகளாக வெளியேற்றப்பட்டதையும் நாம் தொடர்ந்து கண்டு வருகிறோம்.

● இன்னும் பல்வேறு நாடுகளில் இஸ்லாமியர்களின் வாழ்வாதாரமும் வாழ்விடங்களும் எந்த நேரமும் சூறையாடப்படலாம் என்ற நிலை தொடர்கிறது.

● நம் நாட்டிலும் இன்று சில மாநில அரசுகள் இஸ்லாமியர்களுக்கு எதிரான போக்கைக் கொண்டிருப்பதும் இஸ்லாமியர் உரிமைகளை மறுப்பதும் இஸ்லாமியருக்கு கொடுமை இழைத்தவர்களைக் குற்றமற்றவர்களாக அறிவித்து அவர்களுக்கு மாலையிட்டு மரியாதை செய்வதும் எல்லாம் நடந்துகொண்டு இருப்பதை அறிவோம்.

## என்ன காரணம்?

மேற்படி சம்பவங்களுக்கு வேறுபல காரணங்கள் இருந்தாலும் இங்கெல்லாம் தாக்குதலுக்கு உள்ளாவது யார் என்பது முக்கியமாக கவனிக்கப்பட வேண்டிய விஷயமாகும். அவர்கள் ஏதேனும் இனத்தை

அல்லது நிறத்தைச் சார்ந்தவர்கள் என்பதாலோ அல்லது ஏதேனும் குறிப்பிட்ட மொழியைப் பேசுபவர்கள் என்பதாலோ தாக்குதலுக்கு உள்ளாகவில்லை. **மாறாக இஸ்லாம் என்ற வாழ்வியல் கொள்கையை அவர்கள் ஏற்றுக்கொண்டுள்ளார்கள் என்பதால்தான் மேற்படி அநீதி அடக்குமுறைகள் அவர்கள் மீது கட்டவிழ்த்து விடப்படுகின்றன என்பதை நீங்கள் கவனிக்கலாம். ஆம், இஸ்லாம் என்ற கொள்கையின் பரவுதலுக்கு எதிராகத்தான் ஆதிக்க சக்திகள் திரண்டு போரிடுகிறார்கள்! அவர்கள் ஏன் இஸ்லாம் என்ற இந்த வாழ்வியல் கொள்கை கண்டு பயப்படுகிறார்கள்? அப்படியென்ன சிக்கலைக் கண்டார்கள் இஸ்லாத்தில்?**

## இஸ்லாம் என்றால் என்ன?

இஸ்லாம் என்ற அரபு வார்த்தையின் பொருள் கீழ்படிதல் என்பதாகும். இதன் மற்றொரு பொருள் அமைதி என்பதாகும். அதாவது நம்மைப் படைத்தவனுக்குக் கீழ்படிந்து அவன் வழங்கும் ஏவல்-விலக்கல்களை ஏற்று வாழ்ந்தால் இவ்வுலகிலும் அமைதி பெறலாம் மறுமை வாழ்க்கையிலும் அமைதி பெறலாம் - அதாவது மோட்சத்தை அடையலாம்- என்பது இம்மார்க்கம் முன்வைக்கும் தத்துவமாகும். இது மனித இனம் அனைத்துக்கும் பொதுவான ஒரு வாழ்வியல் கொள்கை. இதன்படி, இறைவன் எதை எல்லாம் செய்யவேண்டும் என்று நமக்கு கட்டளை இடுகிறானோ அதை செய்ய வேண்டும். அதற்குப் பெயர்தான் நன்மை அல்லது புண்ணியம் அல்லது தர்மம் என்பது. எதையெல்லாம் செய்யக் கூடாது என்று தடுக்கிறானோ அவற்றைச் செய்யக்கூடாது. அதற்குப் பெயர்தான் தீமை அல்லது பாவம் அல்லது அதர்மம் என்பது. அதாவது **மனம்போன போக்கில் தான்தோன்றித்தனமான வாழ்க்கை வாழ்வதைக் கைவிட்டுவிட்டு கட்டுப்பாடான வாழ்க்கைக்கு திரும்புதலே இஸ்லாம்.**

## இறைவனின் எச்சரிக்கை

அவ்வாறு இறைவன் தந்த வாழ்வியலை ஏற்று திருந்தி வாழ முற்படுபவர்களை துன்புறுத்துவது யாராக இருந்தாலும் அவர்கள் இவ்வுலகில் வேண்டுமானால் அவர்கள் செய்யும் குற்றங்களுக்கு எந்த தண்டனையும் அடையாமல் தப்பிக்கலாம். ஏனெனில் இறைவன் இவ்வுலக வாழ்வை ஒரு பரீட்சையாகவும் இவ்வுலகை அதற்கான பரீட்சைக் கூடமாகவுமே படைத்துள்ளான். ஆனால் இந்த பரீட்சைக் கூடம் ஒருநாள் இழுத்து மூடப்படும். அன்று குற்றவாளிகளும் தியாகிகளும் தரம் பிரிக்கப் படுவார்கள். குற்றவாளிகளுக்கு தண்டனையும் தியாகிகளுக்கு உரிய பரிசும் வழங்கப்பட உள்ளன என்பதை திருக்குர்ஆனில் அவன் குறிப்பிடுகிறான்:

- **இறைநம்பிக்கை கொண்ட ஆண்கள் மற்றும் பெண்கள் மீது எவர்கள் கொடுமைகள் புரிந்தார்களோ, பிறகு, அதற்காக மன்னிப்புக் கோரி மீளவில்லையோ, அவர்களுக்கு நிச்சயம் நரகவேதனை இருக்கிறது. மேலும், சுட்டெரிக்கும் தண்டனையும் உண்டு, (திருக்குர்ஆன் 85:10)**
- **எவர்கள் இறைநம்பிக்கை கொண்டு நற்செயல்கள் புரிந்தார்களோ அவர்களுக்குத் திண்ணமாக சுவனங்கள் இருக்கின்றன. அவற்றின் கீழே ஆறுகள் ஓடிக் கொண்டிருக்கும். இதுவே பெரும் வெற்றியாகும். (திருக்குர்ஆன் 85:11)**

# சமூக மாற்றத்தை உண்டாக்கும் இஸ்லாமிய நம்பிக்கைகள்

மனம்போன போக்கில் தான்தோன்றித்தனமான வாழ்க்கை வாழ்வதைக் கைவிட்டுவிட்டு கட்டுப்பாடான வாழ்க்கைக்கு திரும்புதலே இஸ்லாம். ஒருவர் இஸ்லாத்தை ஏற்கிறார் என்றால் என்ன பொருள்? அவர் இஸ்லாம் கற்பிக்கும் கொள்கையை ஏற்று அதன்படி வாழ முற்படுகிறார் என்றுதான் பொருள். ஒரே நாடு, ஒரே இனம் சார்ந்த அல்லது ஒரே மொழி பேசக்கூடிய மக்களில் எவராவது இஸ்லாம் என்ற கொள்கையை ஏற்றவுடன் ஏன் இவ்வாறு சக மக்களின் அல்லது ஆதிக்க சக்தியினரின் எதிர்ப்பை சந்திக்க நேரிடுகிறது?

● அதுவரை தட்டிக்கேட்க யாரும் இல்லை என்ற உணர்வோடு பாவங்களில் வாழ்ந்தவர்கள்...

● கண்டதே காட்சி, கொண்டதே கோலம் என்று தான்தோன்றித்தனமான வாழ்க்கையை வாழ்ந்து கொண்டு இருந்தவர்கள்...

● நிறபேதம் இன பேதம் மொழிபேதம் பாராட்டி பிரிவினை வாதம் பேசிக்கொண்டு இருந்தவர்கள்..

● விபச்சாரம், குடி, போதைப் பழக்கத்தில் மூழ்கி இருந்தவர்கள்..

● கொலை, கொள்ளை, இலஞ்சம் போன்றவற்றில் மூழ்கி இருந்தவர்கள் மற்றும் இவற்றுக்கு துணை போனவர்கள்..

இப்படிப்பட்டவர்கள் தங்கள் தவறுகளை உணர்ந்து தங்கள் பாவங்களுக்கு இறைவனிடம் விசாரணை உண்டு என்ற உணர்வு மேலிட தன்னைத் தானே திருத்திக் கொண்டு இஸ்லாத்தை ஏற்று கட்டுப்பாடு மிக்க வாழ்வை வாழ முற்பட்டால் ஏன் அவர்கள் மீது அடக்குமுறைகளும் வன்முறைத் தாக்குதல்களும் முடுக்கிவிடப்படுகின்றன?

**அதற்கு முக்கியமான காரணம் இஸ்லாம் கற்பிக்கும் அடிப்படை நம்பிக்கைகள் மனித மனங்களில் ஆழமான தாக்கத்தை உண்டாக்கி அவர்களை சீர்திருத்துகின்றன. அவை வெற்று போதனைகள் அல்லது உபதேசங்களைப் போல் நில்லாமல் மனமாற்றத்தோடு செயல்முறை மாற்றங்களையும் உண்டாக்குகின்றன. அவை மக்களை பிரித்தாண்டு சுரண்டும் ஆதிக்க சக்திகளுக்கு பெரும் சவாலாக அமைந்து விடுகின்றன.**

**1. ஒன்றே குலம்:** அனைத்து மனிதர்களும் ஒரு ஆண் ஒரு பெண்ணிலிருந்து உருவாகி உலகெங்கும் பல்கிப் பெருகியவர்களே. நாம் எங்கு வாழ்ந்தாலும் எம்மொழியைப் பேசினாலும் ஒரே குடும்பத்தின் அங்கத்தினர்களே.

● **மனிதர்களே! உங்கள் இறைவனுக்குப் பயந்து நடந்து கொள்ளுங்கள், அவன் உங்கள் யாவரையும் ஒரே ஆத்மாவிலிருந்து படைத்தான், அவரிலிருந்தே அவர் மனைவியையும் படைத்தான் பின்னர் இவ்விருவரிலிருந்து, அநேக ஆண்களையும் பெண்களையும் (வெளிப்படுத்தி உலகில்) பரவச் செய்தான் ..... நிச்சயமாக இறைவன் உங்கள் மீது கண்காணிப்பவனாகவே இருக்கின்றான். (திருக்குர்ஆன் 4:1)**

இவ்வாறு ஒரே குடும்பத்தின் அங்கத்தினர்களாக விளங்கும் நமக்குள் இனம், மொழி, நிறம், நாடு போன்ற அடிப்படைகளில் பிரிவினை காட்டுவதோ ஏற்றத்தாழ்வு கற்பிப்பதோ கூடாது என்பதும் இஸ்லாம் கற்பிக்கும் அடிப்படையாகும். எவரேனும் இறைவனுக்கு கட்டுப்பட்டு அதிகமான நல்லொழுக்கம் உடையவரானால் அவர்தான் இறைவனிடத்தில் உயர்ந்தவர் என்கிறது இஸ்லாம்:

- **மனிதர்களே! நாம் உங்களை ஓர் ஆணிலிருந்தும் பெண்ணிலிருந்தும் படைத்தோம். பிறகு நீங்கள் ஒருவருக்கொருவர் அறிமுகமாகிக் கொள்ளும் பொருட்டு உங்களை சமூகங்களாகவும் கோத்திரங்களாகவும் அமைத்தோம். உண்மையில், உங்கள் இறைவனிடம் அதிக கண்ணியம் வாய்ந்தவர் உங்களில் அதிக இறையச்சம் கொண்டவர்கள்தாம். திண்ணமாக, அல்லாஹ் அனைத்தையும் அறிந்தவனாகவும், தெரிந்தவனாகவும் இருக்கின்றான். (திருக்குர்ஆன் 49:13)**

**2. ஒருவனே இறைவன்:** அனைத்து மனிதர்களையும் அகில உலகையும் படைத்து பரிபாலித்து வரும் இறைவனும் ஒருவனே. அவன் மட்டுமே வணக்கத்துக்கு உரியவன்.

- **சொல்வீராக: அல்லாஹ், அவன் ஒருவனே, அவன் தேவைகள் அற்றவன் அவன் யாரையும் பெற்றேடுக்கவும் இல்லை. அவனையும் யாரும் பெற்றெடுக்கவும் இல்லை. அவனுக்கு நிகராக யாரும் எதுவும் இல்லை. (திருக்குர்ஆன் 112:1-4)**

இறைவனின் தன்மைகளை இவ்வாறு புரிந்துகொண்டு இடைத்தரகர் களுக்கோ மூடநம்பிக்கைகளுக்கோ வீண் சடங்குசம்பிரதாயங்களுக்கோ இடம் கொடாமல் அவனை நேரடியாக வணங்க வேண்டும். மேலும் இறைவனுக்கு பதிலாக படைப்பினங்களைக் காட்டி அவற்றைக் கடவுள் என்று சொல்வதோ வணங்குவதோ கூடாது என்கிறது இஸ்லாம். இச்செயல் உண்மை இறைவனைப் பற்றிய மதிப்புணர்வையும் (seriousness) அச்சத்தையும் போக்கிவிடுவதால் மக்களிடையே பாவங்கள் அதிகரிக்க ஏதுவாகிறது. இது இறைவனால் மன்னிக்கப்படாத பாவமாகும்.

### 3. வாழ்க்கையின் நோக்கமும் மறுமை வாழ்வும்.

இந்த தற்காலிக வாழ்க்கை என்பது ஒரு பரீட்சையாகவும் இவ்வுலகம் அதற்கான பரீட்சைக் கூடமாகவும் படைக்கப்பட்டுள்ளது என்கிறது இஸ்லாம். அதாவது இவ்வுலகம் ஒருநாள் முழுமையாக அழிக்கப்பட்டு மீண்டும் இறைவனின் கட்டளை வரும்போது அனைத்து மனிதர்களும் இறுதி விசாரணைக்காக உயிர்கொடுத்து எழுப்பப்படுவார்கள். மறுமையில் புண்ணியவான்களுக்கு அளவிலா இன்பங்கள் நிறைந்த சொர்க்கமும் பாவிகளுக்கு கடும் வேதனைகள் நிறைந்த நரகமும் நிரந்தர இருப்பிடங்களாக வழங்கப்படும்.

- **ஒவ்வோர் ஆத்மாவும் மரணத்தைச் சுகித்தே ஆகவேண்டும் அன்றியும் - இறுதித் தீர்ப்பு நாளில் தான், உங்க(ள் செயல்க)ளுக்குரிய பிரதி பலன்கள் முழுமையாகக் கொடுக்கப்படும். எனவே எவர் (நரக) நெருப்பிலிருந்து பாதுகாக்கப்பட்டுச் சுவர்க்கத்தில் பிரவேசிக்குமாறு செய்யப்படுகிறாரோ. அவர் நிச்சயமாக வெற்றியடைந்து விட்டார். இவ்வுலக வாழ்க்கை மயக்கத்தை அளிக்கவல்ல (அற்ப இன்பப்)**

**பொருளேயன்றி வேறில்லை. (திருக்குர்ஆன் 3:185)**

**4. இறை தூதுத்துவம்:** மனிதகுலம் பூமியில் வாழத்தொடங்கிய நாள் முதல் வெவ்வேறு காலகட்டங்களில் பூமியின் பல்வேறு பாகங்களுக்கு மேற்படி உண்மைகளை இறைவன் போதித்து வந்துள்ளான். அதற்காக மனிதர்களில் புனிதர்களைத் தேர்ந்தெடுத்து அவர்களை தன் தூதர்களாக நியமித்து மக்களுக்கு வழிகாட்டி வந்துள்ளான். அவ்வாறு வந்த **இறைத்தூதர்களில் இறுதியாக வந்தவரே முஹம்மது நபி(ஸல்) அவர்கள். அவர்கள் மூலமாக அனுப்பப்பட்ட வேதமே திருக்குர்ஆன். முஹம்மது நபி (ஸல்) அவர்கள் இஸ்லாத்தை அவராக தோற்றுவிக்கவில்லை என்பதும் மாறாக அவர்கள் இதை மறு அறிமுகம் செய்து வைத்தார் என்பதும் இங்கு கவனிக்கவேண்டிய விடயமாகும்.**

அனைத்து மனிதகுலத்திற்கும் பொதுவான, பகுத்தறிவு பூர்வமான இந்த நம்பிக்கைகளை வெறும் போதனையோடு நிறுத்திவிடாது அவற்றில் மனிதன் வாழ்நாள் முழுக்க நிலைத்திருக்க அவனுக்கு தெளிவான ஒரு வாழ்க்கைத் திட்டத்தையும் வழிகாட்டுதலையும் வழங்குகிறது இஸ்லாம். ஐவேளை தொழுகை, ஜகாத் எனப்படும் கட்டாய தர்மம், ரமலான் மாத நோன்பிருத்தல் போன்ற கட்டாயக் கடமைகள் தனிநபர் ஒழுக்கத்தை பேணுவதோடு சமூகப் பிணைப்பையும் ஒற்றுமையையும் ஒத்தாசையையும் நடைமுறைப் படுத்துபவையாக உள்ளன.

# பரீட்சைக் கூடத்தில் சோதனைகள் சகஜமே

இந்தக் குறுகிய தற்காலிக வாழ்க்கை என்பது நாம் நல்லவர்களா கேட்டவர்களா என்பதை சோதித்து அறிவதற்கான ஏற்பாடு என்பதும் இவ்வுலகம் அதற்கான பரீட்சைக் கூடமே என்பதும் நல்லவர்கள் மறுமை வாழ்க்கையில் சொர்க்கத்திற்கும் கெட்டவர்கள் நரகத்திற்கும் செல்கிறார்கள் என்பதும் இஸ்லாமிய நம்பிக்கைகளில் முக்கியமானதாகும்.

● **உங்களில் எவர் செயல்களால் மிகவும் அழகானவர் என்பதைச் சோதிப்பதற்காக அவன், மரணத்தையும் வாழ்வையும் படைத்தான் மேலும், அவன் (யாவரையும்) மிகைத்தவன் மிக மன்னிப்பவன். (திருக்குர்ஆன் 67:2)**

பரீட்சைக் கூடமே இது என்று புரிந்துகொண்டால் இங்கு சோதனைகள் நம்மை எதிர்கொள்ளும்போது அவற்றைக் கண்ட விசுவாசிகள் துவண்டுவிடக் கூடாது.

இறைவன் கேட்கிறான்:

● **உங்களுக்கு முன் சென்றோருக்கு ஏற்பட்டது போல் உங்களுக்கும் ஏற்படாமல் சொர்க்கத்தில் நுழையலாம் என்று எண்ணிக் கொண்டிருக்கிறீர்களா? அவர்களுக்கு வறுமையும், துன்பமும் ஏற்பட்டன. இறைவனின் உதவி எப்போது? என்று (இறைத்) தூதரும் அவருடன் உள்ள நம்பிக்கை கொண்டோரும் கூறுமளவுக்கு அலைக்கழிக்கப் பட்டனர். கவனத்தில் கொள்க! இறைவனின் உதவி அருகிலேயே உள்ளது. (திருக்குர்ஆன் 2:214)**

# சூரியன் ஒளி இழக்கும்போது ..(தொடர்ச்சி)

'பின்னர் அது உருட்டப்பட்டு தூக்கி எறியப்படும்' என்றெல்லாம் பொருள் உள்ளதாக திருக்குர்ஆன் விரிவுரையாளர்கள் கூறுகிறார்கள். நம் கைகளில் புழங்கும் ஒரு பொருளாக இருந்தால் தீர்மானமாக எது பொருத்தமானது என்பதை நாம் புரிந்துகொள்ள முடியும். ஆனால் தூரத்தில் இருக்கும் ஒரு பொருளைக் குறித்து கூறப்படும்போது மேற்படி பொருட்களில் எது உண்மையாகப் பொருந்தும் அல்லது அனைத்துமே பொருந்திப் போகுமா என்பதை நாம் தீர்மானமாக அறியமுடியாது. ஆனால் சூரியனைப் படைத்த இறைவன் - அவன்தான் திருக்குர்ஆனின் ஆசிரியர்- மட்டும்தான் அறிவான்.

எது எப்படியிருந்தாலும் சூரியன் என்பது மனிதனின் ஆராய்ச்சிப் பொருள். அறிவியல் வளரவளர அதைப் பற்றிய உண்மைகள் கொஞ்சம் கொஞ்சமாக அறிந்து வருகிறோம். வெறுமனே ஒரு நெருப்புக் கோளம் என்று பெரும்பாலோர் நினைத்துக் கொண்டிருகிறார்கள். கீழ்க்கண்ட தகவல்களை நாம் அறியவரும்போது நமது இறைவனின் பிரம்மாண்டத்தையும் மகத்துவத்தையும் நாம் உணரமுடிகிறது.

- சூரியனிடமிருந்து வரும் வெளிச்சத்திற்குக் காரணம் அதில் உருவாகும் போட்டோன்கள் பயணித்து நம்மை வந்தடைகின்றன என்பதே. அந்த போட்டோன்கள் சூரியனிலிருந்து நம்மை வந்தடைய 8 நிமிடம் 2 செகண்டுகள் எடுக்கின்றன

- ஆனால், உண்மையில் சூரியனில் அந்த போட்டோன் உருவாகியதிலிருந்து நம் கண்ணை வந்தடைய ஒரு இலட்சம் ஆண்டுகளிலிருந்து பத்து இலட்சம் ஆண்டுகள்வரை ஆகின்றன.

- ஒரு போட்டோன் வெற்றிடங்களில் நொடிக்கு 300,000 கிமீ வேகத்தில் பயணிப்பவை. ஆனால், கதிரவனின் மையக் கோளத்தில் உருவாகும் ஒரு போட்டோன்கள் அப்படியானவை அல்ல. கதிரவனின் மையக்கருவில் நடைபெறும் அணுக்கருப் பிணைவினால் (nuclear fusion) போட்டோன்கள் உருவாகின்றன. சூரியன் தன்னுள்ளே பல அடுக்குகளைக் கொண்டது. அதன் மையத்தைச் சூழவுள்ள அடுக்கை, கதிர்வீச்சுக் கோளம் (radiation zone) என்கிறோம். இதுவே கதிரவனின் ஆற்றல் அனைத்தையும் உருவாக்கும் இடமாகும். கதிரவனின் அளவுடன் ஒப்பிடும்போது மிகச்சிறிய கோளம்தான் இது. வெறும் 300,000 கிமீ விட்டமுடையது. கிட்டத்தட்ட 25 பூமியினளவு கொண்டது. ஆனால், அது மாபெரும் ஆற்றல் கிடங்கு. 15 மில்லியன் செல்சியஸ் வெப்பநிலையுடன் கொதிக்கும். மையத்தில் உருவாகும் ஹைட்ரஜன் அணுக்கள் இந்த மண்டலத்திலுள்ள வெப்பநிலையைத் தாங்கமுடியாமல் எலெக்ட்ரோனும், புரோட்டோனுமாக உடைந்து பிரிகின்றன. அவ்வளவு வெப்பம்! அப்போது, அந்த இடத்தில் எலெக்ட்ரோன்களும், புரோட்டோன்களும் , துகள்களாகவும் இருக்காது, வாயுவாகவுமிருக்காது, திரவமாகவும் இருக்காது. இவை எல்லாம் கலந்த கூழ் (soup) நிலையே அங்கு காணப்படும். அதையே பிளாஸ்மா (plasma) என்கிறோம். இந்த பிளாஸ்மாக் கூழ், மிகமிகமிகமிகச் செறிவான நிலையில் கதிர்வீச்சு மண்டலத்தை நிரப்பியிருக்கும்.

- இந்தப் பிளாஸ்மாக் கூழினுள் நிறைந்திருக்கும் புரோட்டோன்கள், 15

*மில்லியன் செல்சியஸ் வெப்பநிலையில் ஒன்றுடன் ஒன்று பிணைகின்றன (fusion). அப்போதுதான் போட்டோன்களும், ஆற்றலும் வெளிவிடப்படுகின்றன. அங்கு வெளிவிடப்படும் ஆற்றல் எவ்வளவு தெரியுமா? நொடிக்கு 10 பில்லியன் ஹைட்ரஜன் குண்டுகளுக்கான ஆற்றல். இதுபோல ஒவ்வொரு நொடிக்கும் பத்து பில்லியன் ஹைட்ரஜன் குண்டுகள் அளவான ஆற்றல் கதிரவனிலிருந்து செலவாகிக்கொண்டே இருந்தால், ஒரு நாள் அது தனது ஆற்றலை இழந்தே ஆகவேண்டும்.*

*ஆக இயற்கையாகவே சூரியன் அழியக்கூடியது - ஒளி மங்கக் கூடியது - என்பதை அறிவியல் உண்மைகள் நமக்குச் சொல்கின்றன. யுக முடிவு பற்றிய கட்டளை இறைவனிடம் இருந்து வரும்போது திடீரெனவும் இவை நிகழும் என்பதை நாம் அறியவேண்டும்.*

- *கதிரவனின் மையக் கோளத்திலிருந்து உருவாகும் போட்டோன், பிளாஸ்மாக் கூழின் செறிவினூடாகப் பயணிக்கும்போது, அங்கிருக்கும் பிளாஸ்மாத் துகள்களுடன் மாறிமாறி முன்னே பின்னே மோதிக்கொண்டு நகர்கின்றன. அவ்வாறு நகர்ந்து கதிரவனின் மேற்பரப்பிற்கு வந்து, வெளியே தப்பிச் செல்கின்றன. இந்தப் பயணத்திற்குத்தான் ஒரு இலட்சம் முதல் பத்து இலட்சம் ஆண்டுகள் ஆகின்றன. இப்படியாகக் கதிரவனின் மேற்பரப்பை அடைந்ததும் திடீர் வேகம் எடுத்துக்கொண்டு 8நி 20செ இல் பூமியிலுள்ள உங்கள் கண்களை வந்தடைகின்றன.*

- *ஆக, சூரியனின் உட்கருவில் உருவான ஒரு போட்டோன் ஒரு இலட்சம் ஆண்டுகளும் எட்டு நிமிடங்களும் பயணம் செய்து உங்கள் விழித்திரையில் பளிச்சிடுகின்றன.*

**படைத்தவனின் மகத்துவம்**

**விண்ணில் காணும் எண்ணற்ற நட்சத்திரங்களில் நமக்கு அருகாமையில் உள்ள நட்சத்திரம்தான் சூரியன். இதைவிட பன்மடங்கு பூதாகரமானவை அவற்றில் உள்ளன. அவை அனைத்திலும் இதுபோன்ற நிகழ்வுகள் நடந்து கொண்டு இருக்க வேண்டும் அல்லவா? இவற்றிற்கான மென்பொருளை இயற்றி அவற்றை இயக்கி வருபவன் எத்தனை மகத்தானவன் என்பதை நாம் சிந்திக்கக் கடமைப்பட்டுள்ளோம்.**

- (நபியே!) மிக உயர்வானவனாகிய உமதிரட்சகனின் பெயரை நீர் (புகழ்ந்து) துதி செய்வீராக! அவன் எத்தகையவனென்றால், அவனே (படைப்பினங்களனைத்தையும்) படைத்து பிறகு (அவற்றைச்) செவ்வையாக்கினான். இன்னும், அவன் எத்தகையவனென்றால், அவனே (அவற்றுக்கு வேண்டிய அனைத்தையும்) நிர்ணயம் செய்து பிறகு (அவற்றை அடைய) நேர்வழி காட்டினான். (திருக்குர்ஆன் 87:1-3)

- **நம்பிக்கை கொண்டோம் என்று கூறியதன் காரணமாக சோதிக்கப்படாமல் விடப்படுவார்கள் என மனிதர்கள் நினைத்து விட்டார்களா? அவர்களுக்கு முன் சென்றோரையும் சோதித்தோம். உண்மை பேசுவோரை இறைவன் அறிவான்.பொய்யர்களையும் அறிவான்.**

(திருக்குர்ஆன் 29:2,3)

# ஆதிக்கவாதிகள் இஸ்லாத்தை ஏன் எதிர்க்கிறார்கள்?

● இஸ்லாம் ஆதிக்க சக்திகளின் சுயநல சித்தாந்தங்களுக்கு நேர் எதிரான பொதுநல சித்தாந்தமாகும்.

● இனவெறி, குலவெறி, நிறவெறி இவற்றைத் தகர்த்து மனித சமத்துவத்தையும் சகோதரத்துவத்தையும் வலியுறுத்துகிறது.

● சமூகத்தில் ஒரு சாரார் தங்களுக்கு வாய்த்துள்ள சில சிறப்பம்சங்களின் அடிப்படையில் சக மனிதர்களை விட மேன்மையானவர்கள் என்று தங்களைத் தாங்களே உயர்வாகக் கருதிக் கொண்டும் பாவித்துக் கொண்டும் மற்றவர்கள் மீது ஆதிக்கம் செலுத்த முற்படும் போக்கை இஸ்லாம் முற்றாகத் தடுக்கிறது.

இதைப் புரிந்து கொள்ள உலகத்தைச் சுற்றி இறுக்கமாகப் பின்னப்பட்டுள்ள சதிவலைகளையும் அவற்றின் பின்னணிகளையும் சற்று புரிந்துகொள்ள வேண்டும். சுருக்கமாக விளங்க முயற்சிப்போம் வாருங்கள்.

**உலகளாவிய சதிவலை**

கீழ்கண்ட திடுக்கிடும் புள்ளிவிவரங்களைக் கொஞ்சம் கவனியுங்கள்: (ஆதாரம் : www.oxfam.org)

● உலகத்தின் செல்வ வளங்களின் சரிபாதி வெறும் 26 மகா கோடீஸ்வரர்களால் கையகப்படுத்தப் பட்டுள்ளது என்ற உண்மை உங்களுக்குத் தெரியுமா?

● உலக மகா கோடீஸ்வரர்களின் கடந்த வருட (2018) சொத்து வளர்ச்சி 900 பில்லியன் டாலர்கள். அதாவது நாளொன்றுக்கு இரண்டரை பில்லியன் டாலர்கள். இந்த வளர்ச்சி இயற்கையான ஒன்றாக இருந்தால் கவலை இல்லை. ஆனால் இது ஏழைகளைப் பிழிந்தெடுத்து உண்டாகும் வளர்ச்சி எனும்போது கவலை கொள்ளாமல் இருக்க முடியுமா? உலகின் மகா செல்வந்தர்கள் மென்மேலும் செல்வந்தர்களாக ஆகிறார்கள். ஏழைகள் மென்மேலும் ஏழைகளாகி நொந்து மடிகிறார்கள்.

● இன்று நாம் வாழும் உலகின் 10 சதவீதத்துக்கும் குறைவான எண்ணிக்கையில் உள்ள செல்வந்தர்கள் உலக வளங்களின் 85 சதவீதத்திற்கும் மேலான வளங்களை அநியாயமாகக் கையகப்படுத்தி உள்ளதால் உலகின் 700 கோடி மக்கள் எஞ்சியுள்ள சுமார் 15 சதவீத வளங்களை மட்டுமே தங்களுக்கிடையே பங்கீடு செய்யவேண்டிய அவலத்திற்கு உள்ளாகியுள்ளனர்.

● செல்வந்தர்களை விட ஏழைகள் மீது வரிச்சுமை அதிகமாக உள்ளது.

**திட்டமிட்டு நடத்தப்படும் கொள்ளை**

**● உலகெங்கும் கோடிக்கணக்கான மக்கள் உணவு, நீர், வீடு போன்ற அடிப்படை வசதிகள் இல்லாமல் வறுமையில் வாடுவதற்கும் உண்ண உணவின்றி வாடுவதற்கும் போதிய மருத்துவ வசதிகள் இன்றி அன்றாடம் செத்து மடிவதற்கும் மூல காரணம் ஒரு குறிப்பிட்ட சுரண்டல் வாதிகளின் சுயநல வேட்கையே!**

● சிறு நாடுகள் தங்கள் கைவசம் செல்வ வளங்கள் பல இருந்தும் இடைவிடாமல் போர்களுக்கு உள்ளாக்கப்படுவதற்கும் அப்பாவிகள் ஈவிரக்கமின்றி கொல்லப்படுவதற்கும் மூல காரணம் இக்கொடியோர்கள் தங்கள் வருமானங்களையும் ஆதிக்கத்தையும் அதிகரிப்பதற்காக மேற்கொள்ளும் வஞ்சகத் திட்டங்களே!

மேற்கூறப்பட்ட செல்வக் குவிப்பு ஏதோ தற்செயலாக நிகழ்கின்ற ஒன்று என்று நீங்கள் தவறாகக் கணக்கிட்டு விடாதீர்கள். இது பெரும் திட்டமிட்டு நடத்தப்படும் அப்பட்டமான கொள்ளை எனும்போது பொதுநல வாதிகள் கவலை கொள்ளாமல் இருக்க முடியுமா? இவர்கள் தயாரித்து வைத்துள்ள ஆயுதங்களும் பேரழிவு ஆயுதங்களும் விற்கப்பட வேண்டும் என்பதற்காக தங்கள் கைக்கூலிகள் மூலமாக போர்களை மூட்டும்போது நாம் அமைதி காக்க முடியுமா? இவற்றுக்கு எதிராக குரல் கொடுக்க வேண்டாமா? இக்கொடுமையைத் தடுக்க முயற்சிகள் மேற்கொள்ள வேண்டாமா?

## அநீதிக்கு எதிராக இஸ்லாம்

இஸ்லாமிய மார்க்கம் அதனை ஏற்றுக் கொண்டோரை அநீதிக்கு எதிரான போர்களத்தில் நிறுத்துகிறது.

● "உங்களில் எவரேனும் தீமையைக் கண்டால் கையால் தடுக்க வேண்டும். இயலாவிட்டால் நாவால் தடுக்க வேண்டும். அதற்கும் இயலாவிட்டால் மனதால் வெறுக்க வேண்டும். இதுதான் இறைநம்பிக் கையின் இறுதிநிலையாகும்." என்பது நபிமொழி (நூல்: முஸ்லிம்)


**● உலக மக்கள் மீது அநியாயமாக திணிக்கப்படும் வறுமைக்கும் நோய்களுக்கும் போர்களுக்கும் காரணமாக விளங்கும் இக்கொடி யோர்களின் பிடியில் இருந்து உலகை விடுவிக்கப் போராடும் ஒரே மக்கள் சக்தியாக இஸ்லாம் உருவெடுத்து வருவதால்தான் இன்று அது கடுமையான விமர்சனங்களுக்கும் எதிர்ப்புக்கும் ஆதிக்க சக்திகளின் திட்டமிட்ட தாக்குதல்களுக்கும் உள்ளாகிறது என்பதை ஆராய்வோர் உணரலாம்**.

மேலும் இஸ்லாம் என்ற இறை தந்த வாழ்வியல் கொள்கையை இன்று உலக மக்கள் அதிகம் அதிகமாக ஏற்று வருகிறார்கள். இஸ்லாம் கூறும் தெளிவான கடவுள் கொள்கை, வாழ்க்கையின் நோக்கம், மனித உரிமைகள், பெண்ணுரிமை, சமத்துவம், உலக சகோதரத்துவம், வாழ்வியல் பிரச்சினைகளுக்கான தீர்வுகள், நல்லொழுக்கம், கட்டுப்பாடு போன்ற பல விடயங்களும் உலக மக்களை அன்றாடம் ஈர்த்து வருகின்றன. இந்த வளர்ச்சி தங்களின் செல்வக்குவிப்பையும் சுரண்டலையும் அராஜகங்களையும் தடுத்துவிடும் என்று அந்த ஆதிக்க சக்திகள் அஞ்சுகிறார்கள். எனவே இஸ்லாத்தையும் இக்கொள்கையை ஏற்றோர்களையும் தவறான ஒளியில் சித்தரித்து இந்த மக்கள் இயக்கத்தின் வளர்ச்சியைத் தடுக்க அவர்கள் பெரும்பாடு படுகிறார்கள். ஆனால் இதைத் தடுக்க முடியாது என்கிறான் இவ்வுலகைப் படைத்தவன்!

**● "தம் வாய்களைக் கொண்டே இறைவனின் ஒளியை (ஊதி) அணைத்துவிட அவர்கள் விரும்புகின்றார்கள். ஆனால் இறைமறுப்பாளர்கள் வெறுத்த போதிலும் இறைவன் தன் ஒளியை பூர்த்தியாக்கி வைக்காமல் இருக்க மாட்டான்." (திருக்குர்ஆன் 9:32)**

# உலக பயங்கரவாதமும் உண்மைகளும்

## பொருளாதார அடிமைத்தன வரலாறு




● பண்டமாற்று (Barter system) முறையில் நடைபெற்றுக்கொண்டிருந்த வியாபாரங்கள் பிற்காலத்தில் தங்கம் மற்றும் வெள்ளி நாணயங்கள் மூலம் நடைபெறத் துவங்கியது. நாணயங்களின் பாதுகாப்புக்காக சில செல்வந்தர்கள் பாதுகாப்புப் பெட்டகங்கள் (வங்கிகள்) அமைத்தார்கள். மக்கள் ஒப்படைத்த தங்க நாணயங்களுக்காக பெட்டகக்காரர்கள் தங்கள் கையெழுத்திட்ட ரசீதுகளை வழங்கினார்கள். காலப்போக்கில் ரசீதுகளை பல்வேறு விகுதிகளில் (denomination) அச்சிட்டு வெளியிடவும் செய்தனர்.

● தொடர்ந்து கொடுக்கல் வாங்கல்கள் ரசீதுக் காகிதங்கள் மூலம் நடைபெற ஆரம்பித்தது. இம்முறை மக்களுக்கு எளிதாக இருந்ததால் மக்கள் இதற்கே பழகி விட்டார்கள். காலப்போக்கில் பெட்டகத்தில் ஒப்படைத்திருந்த நாணயங்களைப் பற்றி அவர்கள் கவலைப்படவில்லை.




**● இந்த சூழ்நிலையை பயன்படுத்தி வங்கியாளர்கள் மோசடி செய்யத் துவங்கினர். வங்கியில் தங்க நாணயங்களின் இருப்பைவிட அதிகமான அளவில் ரசீதுகளை அச்சிட்டு அதைக் கொண்டு தாங்களுக்கு விருப்பமானதை வாங்கிக் குவித்தார்கள். அதே ரசீதுகளை வட்டிக்கு விட்டு சம்பாதிக்கவும் செய்தார்கள். அந்தக் காகிதங்களே பிற்காலத்தில் “பணம்” ஆனது.**

**● போகப்போக அவர்கள் அச்சடித்த அந்தப் “பணத்தைக்” கொண்டே நாட்டை விலைக்கு வாங்கினார்கள். மா∴பியா, ஆட்சியாளர்கள், சொத்துக்கள் இயற்கை வளங்கள் என நாட்டின் பெரும்பான்மை பொருளாதாரத்தையும் தங்களின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தார்கள். முழு நாட்டையும் ஆளும் சக்தி பெற்றார்கள்.**

● இவ்வாறு வங்கி அமைத்து நாட்டின் கரன்சியை உருவாக்கி நாட்டையே அடிமைப்படுத்தும் இந்த வஞ்சக திட்டம் ஜெர்மனியில் ரோத்ச்சைல்ட் என்ற யூத வங்கி முதலாளி குடும்பம் மூலம் உருவானது. தொடர்ந்து இங்கிலாந்து உட்பட அண்டை ஐரோப்பிய நாடுகளையும் இவ்வாறு தங்கள் ஆதிக்கத்திற்குள் கொண்டுவந்தது இந்த யூத குடும்பம்.

## காலனி ஆதிக்கக் கொடுமைகள்

● தொடர்ந்து கடல்வழியாக மார்க்கங்கள் கண்டறிந்து ஆப்பிரிக்கா, அமரிக்கா, ஆஸ்திரேலியா கண்டங்களை தங்கள் இராணுவத்தைக் கொண்டு வென்றெடுத்தார்கள். அங்கு வாழ்ந்த பழங்குடி மக்களை ஈவிரக்கமின்றி கொன்று குவித்தார்கள். சித்திரவதைகள் செய்து அடிமைப் படுத்தினார்கள். துப்பாக்கி முனையில் ஆப்பிரிக்க கறுப்பின மக்களை

அடிமைகளாகப் பிடித்து கப்பல் மூலம் மற்ற கண்டங்களுக்கு ஏற்றுமதி செய்து அடிமை வாணிபம் நடத்தினார்கள்.

● தங்கள் நரவேட்டையையும் உலக வளங்களைக் கொள்ளையடிக்கும் கொடூரத்தையும் காலனியாதிக்கம் என்ற பெயரில் உலகெங்கும் நிகழ்த்தினார்கள். இந்தியாவை காலனியாதிக்கம் செய்த கிழக்கிந்திய கம்பெனியின் (East India Company) முதலாளிகள் இந்த ரோத்ச்சைல்ட் குடும்பமே.

**● இந்தியாவின் வங்கிகளையும் பணத்தாள்களையும் கட்டுப்படுத்தும் இந்திய ரிசர்வ் வங்கியை (சூநளநசஎந டீயமெ ழக ஐனெயை) கிழக்கிந்திய கம்பெனிதான் நிறுவியது. நம் பணத்தாள்களின் விநியோகமும் பணமில்லா பரிவர்த்தனை நிர்வாகமும் தொடர்ந்து அவர்கள் கையில்தான் உள்ளது. அதாவது, நீங்கள் கொடுக்கும் அல்லது வாங்கும் ஒவ்வொரு ரூபாயில் இருந்தும் - அதை நேரடியாகவோ வங்கிகள் மூலமாகவோ இணையம் மூலமாகவோ எவ்வாறு புழங்கினாலும் சரி - கணிசமான பங்கு அவர்களை சென்றடைகிறது.**

● இன்று உலகின் பெட்ரோலிய வளங்கள், நிலத்தடி வளங்கள், விளைபொருட்கள், இயற்கைவளங்கள், உலகக் கனிம வளங்களை தோண்டி எடுக்கும் நிறுவனங்கள், நுகர்வுப்பொருட்கள் வியாபாரம், உலகை அச்சுறுத்தும் பேரழிவு ஆயுதங்கள், இராணுவத் தளவாடங்கள், மருந்துக் கம்பெனிகள், ஊடகங்கள், பொழுதுபோக்கு நிறுவனங்கள் என உலகில் எங்கெல்லாம் எதிலெல்லாம் கொழுத்த வருமானம் வருமோ அவையெல்லாம் இவர்களின் ஆதிக்கத்தின் கீழ் வந்துள்ளன. அவற்றில் பெரும்பாலானவற்றை அந்த நிறுவனங்களின் பெரும்பான்மைப் பங்குகளை வாங்குவதன் மூலம் தங்களின் ஆதிக்கத்தின் கீழ் கொண்டு வந்துள்ளார்கள்.

### உலகளாவிய பயங்கரவாதத்தின் ஊற்றுக்கண்

**● இவ்வாறு ஆதிக்கம் பெற்ற ஒரு சில யூத வங்கியாளர்களால் உருவாக்கப்பட்டதுதான் அமெரிக்காவில் நிலைகொண்டுள்ள பெடரல் ரிசர்வ் வங்கி. இது அச்சிட்டு வெளியிடும் காகிதம்தான் உலக நாடுகள் மீது திணிக்கப்படும் டாலர்!இந்த மதிப்பற்ற காகிதப் பணத்தை மதிப்புள்ளதாகக் காட்டி உலக நாடுகளின் மீது திணித்து அந்நாட்டு வளங்களைக் கொள்ளை அடிக்க நடத்தப்படும் அரசியல்தான் இன்று உலக பயங்கரவாதத்தின் ஊற்றுக் கண்ணாக விளங்குகிறது**



● நாடுகளை எப்போதும் போர் முனையில் நிறுத்துவது இவர்களின் முக்கிய பணி. அதன் மூலம் போரிடும் இரண்டு நாடுகளுக்கும் தேவையான பொருளாதாரத்தை கடனாகக் கொடுத்து வட்டி ஈட்டுகிறார்கள். போருக்கான ஆயுதங்களை - போர் விமானங்கள், ஏவுகணைகள், நீர்மூழ்கிக் கப்பல்கள், இன்ன பிற போர் தளவாடங்கள், பேரழிவு ஆயுதங்கள் என அனைத்தையும் இவர்களே சப்ளை செய்கிறார்கள்.

**நாடுகள் இக்கடனைத் திருப்பிச் செலுத்தாத பட்சம் அந்நாடுகளின் வளங்கள் இவர்களுக்குத் தாரை வார்க்கப்படுகின்றன. அந்நாட்டு மக்களின் மீது வரிச்சுமை அதிகரிக்கிறது. உலகில் ஒவ்வொரு நாடும் தங்கள் வருமானத்தில் மூன்றில் ஒரு பங்கிற்கும் மேலாக இராணுவத்திற்காக செலவிட வேண்டிய நிர்ப்பந்தமும் இதனால்தான்.**

● அதற்குப் புறம்பாக ஒவ்வொரு ஐந்து வருடங்களுக்கு இடையே குறைந்தபட்சம் ஒருமுறை பெரிய அளவிலான போரை எப்படியாவது நிகழ்த்துகிறார்கள். தங்களுக்குக் கட்டுப்படாத அரசுகளுக்கு எதிராக உள்நாட்டு கிளர்ச்சியாளர்களை ஊக்குவித்து கலகங்கள் இராணுவப்புரட்சி நிகழ்த்துதல், அந்நிய நாட்டின் தாக்குதலில் இருந்து பாதுகாக்கிறோம் என்ற பெயரில் பலவந்தமாக உள்நுழைந்து இராணுவத்தளம் அமைத்தல் போன்றவை இவர்களது வாடிக்கை. மக்கள் கொத்துக் கொத்தாக மடிவது பற்றி இவர்கள் அறவே கவலைப் படுவது இல்லை.



● தங்களை வெளிப்படுத்திக் கொள்ளாமல் ஒரு இரகசிய சமுதாயமாக இருந்து இயங்கும் இவர்கள் தங்கள் வஞ்சகத் திட்டங்களை செயல்படுத்த அமெரிக்காவை தங்களின் இராணுவக் கரமாக பயன் படுத்து கிறார்கள்.

**● மக்களின் ஒத்துழைப்பும் பங்கேற்பும் வரிப்பணமும் இல்லாமல் போர்களை நிகழ்த்த முடியாது. போர்முனைக்கு மக்கள் செல்ல வேண்டுமானால் அதற்காக மக்களை மூளைச்சலவை செய்ய தங்களின் கைக்கூலிகளை ஏவி சக்திவாய்ந்த ஊடகங்கள் மற்றும் சமூக வலைத்தளங்கள் வாயிலாக மக்களிடையே பொய்களையும் விஷக் கருத்துக்களையும் பரப்புகிறார்கள். தாக்குதலுக்கு உள்ளாக இருக்கும் நாட்டின் மீது அல்லது சமூகத்தின் மீது வெறுப்பை விதைத்து மக்களை ஆவேசம் கொள்ள வைக்கிறார்கள். அதற்கேற்றவாறு இவர்களின் கைக்கூலிகள் மூலம் உலக அரங்கில் நாடகங்கள் அரங்கேற்றப் படுகின்றன.**

**சில உதாரணங்கள்:**

அ) அமெரிக்காவின் இரட்டை கோபுர இடிப்பை நடத்தியது பின்லேடன்தான் என்று ஊடகத் தந்திரங்கள் மூலம் மக்களை நம்பவைத்து ஆப்கானிஸ்தானத்தின் மீது போர் தொடுத்து அந்த நாட்டைக் கைவசப்படுத்தியது. தாலிபான்கள் தடை செய்து வைத்திருந்த 'அஷீஷ்' போதைப் பயிர் நிலங்களை முழுவதுமாக கைப்பற்றி மீண்டும் அதை உற்பத்தி செய்து ஏற்றுமதி செய்வது.

ஆ) ஈராக்கில் பேரழிவு ஆயுதங்கள் பதுக்கப்பட்டு உள்ளன என்று பரப்புரைசெய்து அந்நாட்டைத் தாக்கி சத்தாம் ஹுசைனை கொன்று அந்நாட்டைக் கைப்பற்றியது. எண்ணெய் வளங்களை கைவசமாக்கியது.

● தங்களின் வஞ்சகத் திட்டத்தை செயல்படுத்துவதற்காக அனைத்து வாய்ப்புகளையும் தவறாமல் பயன்படுத்துகிறார்கள். பெரும் செலவில்

தங்கள் கையாட்கள் மூலம் மதம் சார்ந்த அல்லது இனம் சார்ந்த பயங்கரவாத அமைப்புகளை உருவாக்குகிறார்கள். இந்த அமைப்புகள் மூலம் மதவெறி மற்றும் இனவெறியூட்டும் பிரச்சாரங்கள் செய்து ஆதரவாளர்களை உருவாக்குகிறார்கள். இவர்களைக் கொண்டு அப்பாவிகளைக் கொல்லும் குண்டு வெடிப்புகள், தற்கொலைப்படைத் தாக்குதல்கள் நடத்துகிறார்கள். இதுபோன்ற ஒரு அமைப்புதான் ஐஎஸ்ஐஎஸ். இது முழுக்கமுழுக்க இஸ்ரேலின் மொசாத் மற்றும் அமெரிக்க CIA வால் உருவாக்கப்பட்ட ஒன்று.

**எப்போது விடுதலை?**

உலகளாவிய மட்டத்தில் தொடர்ந்து நடந்து வரும் இந்த அதிபயங்கரவாதத்தை எதிர்த்து நின்ற அனைத்து மக்கள் சக்திகளும் அரசுகளும் தோல்வியுற்றன. அவை நிர்மூலமாக்கப்பட்டன. ஆனால் இஸ்லாம் மட்டுமே சளைக்காமல் இந்தக் கொடூரர்களுக்கு எதிராகப் போராடிவருகிறது. உலக மக்கள் விழிப்புணர்வு பெற்று இவர்களை அடையாளம் கண்டு இவர்களுக்கு எதிராகத் திரும்பும்வரை முழுமையான விடுதலை என்பது கடினமே!

# நபிகளார் கூறிய நல்லுபதேசங்கள்

● “இறப்பை (அடைய) ஆசைப்படாதீர்கள்“ - அறிவிப்பு: அனஸ்(ரலி) (நூல்: புகாரி)

● “உங்களில் எவரும் மரணத்தை விரும்ப வேண்டாம். ஒன்று அவர் நல்லவராக இருப்பார் (அவர் உயிர் வாழ்வதன் மூலம் நன்மையை) அவர் அதிகமாக்கிக் கொள்ளலாம். அல்லது அவர் தீயவராக இருப்பார் அவர் (உயிர் வாழ்வதால்) மனம் திருந்தக்கூடும்” (அறிவிப்பு :அபூஹுரைரா(ரலி) (புகாரி))

● “உலர்ந்த திராட்சை போன்ற (சுருங்கிய) தலையுடைய அபிசீனிய (கறுப்பு நிற) அடிமையொருவர் உங்களுக்குத் தலைவராக ஆக்கப்பட்டாலும் (அவரின் சொல்லைக்) கேளுங்கள் (அவருக்குக்) கீழ்ப்படியுங்கள்” - அறிவிப்பு: அனஸ்(ரலி) (புகாரி)

● “நீங்கள் ஆட்சிப் பதவியை அடைய பேராசைப் படுகின்றீர்கள். ஆனால், மறுமை நாளில் அதற்காக வருத்தப்படுவீர்கள்.” - அறிவிப்பு : அபூ ஹுரைரா(ரலி) (புகாரி)

● “ஓர் அடியானுக்குக் குடிமக்களின் பொறுப்பை இறைவன் வழங்கியிருக்க, அவன் அவர்களின் நலனைக் காக்கத் தவறினால், சொர்க்கத்தின் வாடையைக் கூட அவன் பெறமாட்டான்” - அறிவிப்பு: ஹஸன் அல்பஸரி (ரஹ்) (புகாரி)

● “விளம்பரத்திற்காக நற்செயல் புரிகிறவரை (அவரின் நோக்கத்தை) இறைவன் மறுமைநாளில் விளம்பரப்படுத்துவான். (மக்களைச்) சிரமப்படுத்துகிறவரை இறைவன் மறுமைநாளில் சிரமத்திற்குள்ளாக்குவான்.” - அறிவிப்பு: தரீ∴ப் அபீ தமீமா இப்னு முஜாலித் அல்ஹுஜைமீ(ரஹ்) (புகாரி)

● “மனிதனின் உறுப்புகளிலேயே முதல்முதலாக (அழுகி) துர்நாற்றமெடுப்பது அவனுடைய வயிறுதான். எனவே, (அனுமதிக்கப்பட்ட) நல்ல உணவை மட்டுமே உண்ண சக்தி படைத்தவர் அவ்வாறே செய்யட்டும்.” - அறிவிப்பு: தரீ∴ப் அபீ தமீமா இப்னு முஜாலித் அல்ஹுஜைமீ(ரஹ்) (புகாரி)

**ஆதிக்கவாதிகள் இஸ்லாத்தை ஏன் எதிர்க்கிறார்கள்?**

# தீமைகளைத் தடுக்காமல் அமைதி என்பது இல்லை

தனி நபர்கள் செய்யும் தீமைகளானாலும் சரி, கூட்டங்கள் அல்லது கும்பல்கள் செய்யும் தீமைகளானாலும் சரி, அரசாங்கங்களும் அவர்களை ஆட்டிப் படைக்கும் வல்லரசுகள் நிகழ்த்தும் கொடுமைகள் ஆனாலும் சரி அவை தட்டிக்கேட்கப் படாமலும் தடுக்கப் படாமலும் தொடருமானால் மனித வாழ்க்கை என்பது கேள்விக்குறியாகவே இருக்கும். இவற்றின் முற்றிய நிலையில் இன்று நாம் வாழ்ந்து வருகிறோம். மக்கள் வாழவே வெறுக்கும் நிலையில் நாடு உள்ளது என்பது தேசிய குற்றவியல் ஆவணம் தரும் அதிர்ச்சித் தகவல்கள் உணர்த்துகின்றன.

தேசிய குற்றவியல் ஆவணக்காப்பகத்தின் சமீபத்திய அறிக்கைப்படி இன்று நாளொன்றுக்கு நம் நாட்டில் 371 தற்கொலைகள் காவல் நிலையங்களில் பதிவாகின்றன. பதிவு செய்யப்படாதவை இதைவிட 6 மடங்கு அதிகம் என்று வேறு ஒரு புள்ளிவிவரம் கூறுகிறது. அதாவது நம்நாட்டில் ஏறக்குறைய 2ஆயிரத்திற்கும் மேற்பட்ட தற்கொலைகள் ஒவ்வொரு நாளும் நிகழ்கின்றன என்று அர்த்தம்!

## தீமைகள் பெருகக் காரணங்கள்

**இத்தீமைகள் கட்டுகடங்காமல் பெருகுவதற்கு முக்கிய காரணங்களாக கீழ்கண்டவற்றை நாம் கூறலாம்:**

**அ) மனிதனுக்கும் சக மனிதனுக்கும் இடையே உள்ள உறவு உணரப்படாதது அல்லது அதுபற்றி கற்பிக்கப் படாதது.**

**ஆ) தன்னைத் தட்டிக் கேட்கவோ தண்டிக்கவோ யாரும் இல்லை என்ற தைரியம்.**

**உலகில் மீண்டும் அமைதி திரும்ப வேண்டுமானால் மனித மனங்களை சீர்திருத்த வேண்டும். சில முக்கியமான உண்மைகளை உணர்த்தியே ஆகவேண்டும்:**

- **மனிதர்களே! உங்கள் இறைவனுக்குப் பயந்து நடந்து கொள்ளுங்கள், அவன் உங்கள் யாவரையும் ஒரே ஆத்மாவிலிருந்து படைத்தான், அவரிலிருந்தே அவர் மனைவியையும் படைத்தான் பின்னர் இவ்விருவரிலிருந்து, அநேக ஆண்களையும் பெண்களையும் (வெளிப்படுத்தி உலகில்) பரவச் செய்தான் ..... நிச்சயமாக இறைவன் உங்கள் மீது கண்காணிப்பவனாகவே இருக்கின்றான். (திருக்குர்ஆன் 4:1)**

அதாவது அனைத்து மனித குலமும் ஒரே குடும்பமே, நம் அனைவருக்கும் ஒரே இறைவனே என்று உலகளாவிய சகோதரத்தையும் சமத்துவத்தையும் வலியுறுத்துவதோடு அந்த இறைவனின் பரிபாலனத்திலும் கண்காணிப்பிலும் அனைவரும் உள்ளோம் என்பதை மனித மனங்களில் அடிப்படையாக விதைப்பதுதான் மேற்கூறிய தீமைகளை தடுப்பதற்கான முதல் படி. அப்போதுதான் மக்களை சீர்திருத்தி ஒழுக்கம் நிறைந்த ஓர் உலகை மறுபடியும் சமைக்க முடியும்.

தனிநபர் ஒழுக்க சீர்கேடுகள், குடும்ப அமைப்பு சீரழிப்பு, சமூகத்

*தீமைகள் தொடங்கி வல்லரசு பயங்கரவாதக் கொடுமைகள் வரை அனைத்து தீமைகளையும் ஒழித்துக் கட்ட வேண்டுமானால் இஸ்லாம் பரிந்துரைக்கும் இது ஒன்று மட்டுமே வழியாக உள்ளது.*

**முறையான இறைநம்பிக்கையும் வாழ்க்கையைப் பற்றிய தெளிவான கண்ணோட்டத்தையும் மறுமை வாழ்வையும் கற்பிப்பதன்வழி இக்கொள்கையை ஏற்பவர்களை சீர்திருத்துவதோடு அவர்களை இனம், குலம், நிறம், மொழி, இடம் போன்ற வேற்றுமைகளைக் கடந்து ஒருங்கிணைக்கிறது இஸ்லாம். அவ்வாறு மேற்படி தீமைகளுக்கு எதிரான உலகளாவிய வலுவான சக்தியாக உருவாக்குகிறது.**

● **மனிதர்களுக்காக தோற்றுவிக்கப்பட்ட சிறந்த சமுதாயமாக நீங்கள் இருக்கிறீர்கள் (எனெனில்) நீங்கள் நல்லதைச் செய்ய ஏவுகிறீர்கள் தீயதை விட்டும் விலக்குகிறீர்கள் இன்னும் இறைவன் மேல் நம்பிக்கை கொள்கிறீர்கள் (திருக்குர்ஆன் 3:110)**

*நன்மையை ஏவுவதையும் தீமையைத் தடுப்பதையும் இறைநம்பிக்கையின் ஒரு பாகமாகவே கற்பிக்கிறது இஸ்லாம்:*

● *இறைத்தூதர் முஹம்மது நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள்:*

*உங்களில் எவரேனும் தீமையைக் கண்டால் கையால் தடுக்க வேண்டும். இயலாவிட்டால் நாவால் தடுக்க வேண்டும். அதற்கும் இயலாவிட்டால் மனதால் வெறுக்க வேண்டும். இதுதான் இறைநம்பிக்கையின் இறுதிநிலையாகும். (நூல்: முஸ்லிம் 78)*

● **பூமியில் சீர்திருத்தம் செய்யப்பட்டபின் அதில் குழப்பம் விளைவிக்காதீர்கள்! அச்சத்துடனும், நம்பிக்கையுடனும் அவனிடம் பிரார்த்தனை செய்யுங்கள்! அல்லாஹ்வின் அருள் நன்மை செய்வோருக்கு அருகில் உள்ளது. (திருக்குர்ஆன் 7:56)**

● **நம்பிக்கை கொண்ட ஆண்களும், பெண்களும் ஒருவர் மற்றவருக்கு உற்ற நண்பர்கள். அவர்கள் நன்மையை ஏவுவார்கள். தீமையைத் தடுப்பார்கள். தொழுகையை நிலைநாட்டுவார்கள். ஸகாத்தையும் கொடுப்பார்கள். அல்லாஹ்வுக்கும், அவனது தூதருக்கும் கட்டுப்படுவார்கள். அவர்களுக்கே அல்லாஹ் அருள்புரிவான். அல்லாஹ் மிகைத்தவன் ஞானமிக்கவன். (திருக்குர்ஆன் 9:71)**

*(அல்லாஹ் என்றால் வணக்கத்திற்குத் தகுதிவாய்ந்த ஒரே இறைவன் என்பது பொருள்)*

## ஞானி லுக்மான் மகனுக்கு செய்த அறிவுரை

● **"என் அருமை மகனே! நீ தொழுகையை நிலை நாட்டுவாயாக. நன்மையை ஏவி, தீமையை விட்டும் (மனிதர்களை) விலக்குவாயாக. உனக்கு ஏற்படும் கஷ்டங்களைப் பொறுத்துக் கொள்வாயாக நிச்சயமாக இதுவே வீரமுள்ள செயல்களில் உள்ளதாகும்."**

● **"(பெருமையோடு) உன் முகத்தை மனிதர்களை விட்டும் திருப்பிக் கொள்ளாதே! பூமியில் பெருமையாகவும் நடக்காதே! அகப்பெருமைக் காரர், ஆணவங் கொண்டோர் எவரையும் நிச்சயமாக இறைவன் நேசிக்க மாட்டான்." (திருக்குர்ஆன் 31:17,18)**

ஆதிக்க வாதிகள் இஸ்லாத்தை ஏன் எதிர்க்கிறார்கள்?

# சமூக அமைதிக்கு சமத்துவமே அடிப்படை

மனித சமத்துவ உணர்வு இல்லாத சமூகத்தில் அமைதி என்பது ஓர் எட்டாக்கனியாகவே தொடரும். ஒரே மனித குலத்தில் பிறந்த மனிதர்களில் ஒரு சாரார் தங்களைத் தாங்களே உயர்ந்தவர்களாக அறிவித்து மற்றவர்களை தாழ்ந்த இனத்தவர், தாழ்ந்த பிறப்புடையவர், நிறம் கறுப்பு, குட்டை, அழகில் குறைந்தவர் என்ற காரணங்கள் கூறி தீண்டாமை கற்பித்தால் எவ்வாறு அங்கு அமைதி உண்டாகும்? அதே அடிப்படையில் மக்களைப் பிரித்து மனித உரிமைகளை மறுத்து அவர்களைச் சுரண்ட முற்பட்டால் அங்கு கலகங்கள் மூள்வது இயற்கைதானே!

இன்று நம் நாடு உட்பட உலகெங்கும் அமைதியின்மைக்கு மிகப்பெரும் காரணமாக விளங்குவது அதுவே. எனவேதான் அமைதிமிக்க சமூகத்தை உருவாக்க விரும்பும் இஸ்லாம், மனித குல ஒருமைப்பாடு குறித்து ஓர் உறுதியான நிலைபாட்டைக் கொண்டுள்ளது. மக்களை இனத்தின், நிறத்தின், நாட்டின், மொழியின் அடிப்படையில் பிரித்து அவர்களை சுரண்ட நினைக்கும் ஆதிக்க சக்திகளுக்கு இது கடும் கோபத்தை மூட்டுகிறது. மக்களை எல்லைகோடுகள் போட்டு நாடுகளாகப் பிரித்து அவர்களுக்கு இடையே வெறுப்பை விதைத்து போர்களை மூட்டி இரு தரப்புக்கும் ஆயுதங்கள் சப்ளை செய்து பொருளீட்டும் உலக வல்லரசுகளுக்கு இஸ்லாத்தின் வளர்ச்சி இனிக்குமா?

**ஒன்றே குலம்**

இறைவன் ஒருவனே என்ற கோட்பாட்டில் எவ்வித சமரசத்திற்கும் இடமின்றி எவ்வாறு உறுதியாக உள்ளதோ அது போன்றே ‘ஒன்றே குலம்’ என்பதிலும் அது உறுதியாக உள்ளது. ஏற்றத் தாழ்வை உருவாக்கும் அனைத்து வழிகளையும் அது அடைத்து விடுகின்றது. சமயக் கோட்பாடுகளின் சந்து பொந்துகளில் ஒளிந்துகொண்டு பேதம் வளர்க்கும் அனைத்து முயற்சிகளையும் அது முறியடித்து விடுகின்றது.

- **“படைப்புகள் அனைத்தும் இறைவனின் குடும்பம் ஆகும்” (நபிமொழி)**
- **“மக்களே! உங்களது இறைவன் ஒருவனே அறிந்து கொள்ளுங்கள்: எந்த ஓர் அரபிக்கும் ஓர் அரபி அல்லாதவரை விடவோ, எந்த ஓர் அரபி அல்லாதவருக்கும் ஓர் அரபியை விடவோ எந்த மேன்மையும் சிறப்பும் இல்லை. எந்த ஒரு வெள்ளையருக்கும் ஒரு கருப்பரை விடவோ, எந்த கருப்பருக்கும் ஒரு வெள்ளையரை விடவோ எந்த மேன்மையும் சிறப்பும் இல்லை.” என்றார் நபிகளார்.**

(நூல்: அத்தர்கீப் வத்தர்ஹீப், அல்பைஹகீ)

- நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: “மக்களே! அல்லாஹ்வை அஞ்சிக் கொள்ளுங்கள் கருப்பு நிற (அபிசீனிய) அடிமை ஒருவர் உங்களுக்குத் தலைவராக ஆக்கப்பட்டாலும் அவர் அல்லாஹ்வின் வேதத்தைக் கொண்டு உங்களை வழி நடத்தி அதை உங்களுக்கிடையில் நிலைநிறுத்தும் காலமெல்லாம் (அவரது சொல்லைக்) கேட்டு நடங்கள்

(அவருக்குக்) கீழ்ப்படியுங்கள்! (நூல்: நஸாயி, திர்மிதி)

இவ்வாறு சமூகப் பிளவுக்கும், நிற வெறிக்கும் , சாதி பாகுபாடுகளுக்கும் அன்றே முடிவு தந்து விட்டு சென்றார்கள்.



## மனிதகுல ஒருமைப்பாட்டை வளர்க்கும் ஏக இறைக் கொள்கை:

படைத்த இறைவன் மட்டுமே வணக்கத்திற்குரியவன். அவன் அல்லாத எவரும் எதுவும் படைப்பினங்களே. அவை எதுவும் வணக்கத்திற்கு உரியவை அல்ல என்பதை தெளிவுபட வலியுறுத்துகிறது இஸ்லாம். அவ்வாறு அவற்றை எவரேனும் கடவுளாக பாவித்து வணங்கினால் அது மிகப்பெரிய பாவம் என்றும் மறுமையில் அவர்கள் என்றென்றும் நரகத்தில் இருப்பார்கள் என்றும் எச்சரிக்கிறது இஸ்லாம்.

இறைவன் அல்லாதவற்றை இறைவனுக்கு ஒப்பாக்கி வழிபடும் செயல் இணைவைத்தல் என்று அறியப்படுகிறது. சமூகத்தில் பல குழப்பங்களுக்கு இட்டுச்செல்லும் இந்தப் பாவத்தில் ஈடுபடுவோருக்கு மறுமையில் கடுமையான தண்டனை காத்திருக்கின்றது என்று திருக்குர்ஆன் எச்சரிக்கிறது:

- **அல்லாஹ்வுக்கு இணை கற்பிப்போருக்கு சொர்க்கத்தை அல்லாஹ் விலக்கப்பட்டதாக ஆக்கிவிட்டான். அவர்கள் சென்றடையும் இடம் நரகம். அநீதி இழைத்தோருக்கு எந்த உதவியாளர்களும் இல்லை. (திருக்குர்ஆன் 5:72)**

(அல்லாஹ் என்றால் “வணக்கத்திற்குத் தகுதிவாய்ந்த ஒரே இறைவன்“ என்று பொருள்)

**மேற்கூறப்பட்டவாறு படைத்தவனான ஏக இறைவனை விட்டு படைப்பினங்களை வணங்கத் தலைப்படும் போது மனித குலமும் அவரவர்களின் கடவுள் கொள்கையைப் பொறுத்து கூறுபோடப் படுகிறது.**

இந்தக் கொடுமைக்கு பலியான நாடுகள் பல. அவற்றில் சிறந்த உதாரணம் நமது நாடுதான். நமது நாட்டின் ஜாதி அமைப்புக்களைப் பாருங்கள். எந்த ஜாதியைச் சேர்ந்தோரானாலும் நாம் அனைவரும் மனிதர்களே. ஒரே இரத்தம், ஒரே மாமிசம் ஒரே உடலமைப்பு என எல்லாம் ஒன்றாக இருந்தும் ஒரு ஜாதி மக்கள் இன்னொரு ஜாதி மக்களோடு கலப்பதில்லை. இதில் உயர்ந்த ஜாதி, தாழ்ந்த ஜாதி, தாழ்த்தப்பட்டோர், தீண்டத்தகாதவர்கள் என பல கூறுகள்! என்ன காரணம்? ஒவ்வொரு ஜாதியும் தங்களுக்கு வெவ்வேறு தெய்வங்கள் இருக்கின்றன என்று நம்புகிறார்கள். அவற்றை குலதெய்வம் என்று சிறப்பு செய்கிறார்கள். இவை மட்டுமல்ல, ஊர்களையும் எல்லைகளையும் பிரிக்கும் காவல் தெய்வங்களும் எல்லைச்சாமிகளும் மனிதர்களுக்கிடையே மேலும் பிளவை வலுப்படுத்துகின்றன. இஸ்லாம் என்ன சொல்கிறது என்றால், இந்த கற்பனை தெய்வங்களை எல்லாம் விலக்கி வைத்து அனைவரும் உங்களைப் படைத்து பரிபாலித்து வரும் அந்த ஒரே இறைவன் பக்கம் மீளுங்கள் என்கிறது.

**ஆதிக்க வாதிகள் இஸ்லாத்தை ஏன் எதிர்க்கிறார்கள்?**

# பிரிவினைவாதத்திற்கும் பிரித்தாளும் சூழ்ச்சிக்கும் சாவுமணி!

மனிதன் மறந்துபோன - அல்லது ஆதிக்க சக்திகள் மறக்கடித்த - ஒரு பேருண்மையை இறைவனின் இறுதிவேதம் திருக்குர்ஆன் உலகுக்கு எடுத்துரைத்து மனித சமத்துவத்தையும் சகோதரத்துவத்தையும் பூமியில் மீண்டும் நிலைநாட்ட முயல்கிறது. இது பிரிவினை வாதம் பேசுவோருக்கும் மக்களைப் பிரித்தாண்டு சுரண்ட முயல்வோருக்கும் பேரிடியாக அமைந்துள்ளது. இதனாலேயே ஆதிக்க சக்திகள் இஸ்லாத்தின் வளர்ச்சி கண்டு பயப்படுகின்றன.

**● மனிதர்களே! நாம் உங்களை ஓர் ஆணிலிருந்தும் பெண்ணிலிருந்தும் படைத்தோம். பிறகு நீங்கள் ஒருவருக்கொ ருவர் அறிமுகமாகிக் கொள்ளும் பொருட்டு உங்களை சமூகங்களாகவும் கோத்திரங்களாகவும் அமைத்தோம். உண்மையில், உங்கள் இறைவனிடம் அதிக கண்ணியம் வாய்ந்தவர் உங்களில் அதிக இறையச்சம் கொண்டவர்தாம். (குர்ஆன் 49 : 13)**

இந்த இறைவசனத்தில் மூன்று விஷயங்கள் கவனிக்கத் தகுந்தவை.

**1. ஒரே குடும்பம்:**

**மனித இனம் ஓர் ஆண் பெண்ணிலிருந்தே தோன்றியது. எனவே அனைவரும் உடன் பிறப்புகள். சகோதரர்களுக்கிடையில் பிறப்பின் அடிப்படையில் பேதம் உண்டாக்க முடியாது என்பது வசனத்தின் முதல் பகுதியின் கருத்தாகும்.**

மனித இனம் ஓர் ஆண் பெண்ணின் வழித்தோன்றல்களாகத்தான் இருக்க முடியும் என்பதை பகுத்தறிவு உடையோர் அனைவரும் ஏற்றுக் கொள்வர். இன்று உலகின் மக்கள் தொகை 700 கோடியாக உள்ளது. இதுவெ சென்ற நூற்றாண்டின் தொடக்கத்தில் இதைவிடக் குறைவாக இருந்தது. இப்படியே பின்னோக்கிச் சென்றால் மக்கள் தொகை சில  லட்சங்களாக, ஆயிரங்களாக, நூறாக குறைந்து இறுதியில் இரண்டாக ஆகிவிடும் என்பது தெளிவான உண்மை. இதை நிறுவ பெரும் ஆராய்ச்சிகள் எதுவும் தேவையில்லை.

**2. ஒருவரையொருவர் அறிந்து கொள்ளவே தோற்றத்தில் மாறுப்பாடுகள்**

திருக்குர்ஆன் வசனத்தின் இரண்டாம் பகுதி நீங்கள் ஒருவருக்கொருவர் அறிமுகமாகிக் கொள்ளும் பொருட்டு உங்களை சமூகங்களாகவும் கோத்திரங்களாகவும் அமைத்தோம் என்று கூறுகிறது.

மனிதர்களுக்கிடையே உள்ள வேறுபாடுகள் வெளித்தோற்றத்தில் மட்டுமே. உறுப்புகளின் அமைப்பு (Anotomy). உடல் இயக்கம் (Physiology) தேவைகள், உணர்வுகள் ஆகியன அனைவருக்கும் ஒரே மாதிரியாக உள்ளன. உள்ளமைப்பில் ஒரே மாதிரியாக இருக்கும் மனித இனம் வெளித்தோற்றத்தில் மட்டும் வேறுபடுவது ஏன் என்ற கேள்வி எழுகிறது. ஒருவரை ஒருவர் அறிந்து கொள்வதற்காக, அடையாளம் கண்டு கொள்வதற்காக இறைவன் செய்த ஏற்பாடே இது என இறைவசனம் விடையளிக்கிறது.

ஆந்த்ரபாலஜி (Anthropology) எனும் மானிட இயலில் மனித ஜாதியை ஆப்பிரிக்கன், ஏசியன், ஆஸ்திரேலியன், நியூகினியன், காகேசியன் என்று ஐந்து வகைகளில் அடக்கி விடுகிறார்கள். தோலின் நிறம், கண்களின் அளவு, அமைப்பு, தலைமயிரின் சுருட்டை போன்ற வெளித்தோற்றங்களை வைத்தே இவை அறிந்து கொள்ளப்படுகின்றன.

**எனவே வெளித்தோற்றத்தில் காணப்படும் வேறுபாடுகள் பரஸ்பர அறிமுகத்திற்காக படைத்தோன் செய்த ஏற்பாடு ஆகும். ஆதிக்கம் செலுத்துவதற்கான சமிக்ஞைகள் அல்ல.**

### 3. உயர்வு என்பது நன்னடத்தை மூலம் மட்டுமே

‘உண்மையில் இறைவனிடத்தில் அதிகக் கண்ணியம் வாய்ந்தவர் உங்களில் அதிக இறையச்சம் கொண்டவர்தான்’ என்பது சமத்துவத்தை முழங்கும் இறைவசனத்தின் மூன்றாவது பகுதியாகும். பிறப்பு, இனம், நாடு, மொழி ஆகியவற்றின் அடிப்படையில் எந்த சமூகத்தினருக்கும் உயர்வு இல்லை. இறைவனை அஞ்சி வாழ்பவர்கள் மட்டுமே இறைவனிடத்தில் கண்ணியம் பெறுவர்.

பிறப்பின் அடிப்படையில் மட்டுமல்ல, வேறுபல வழிகளிலும் தங்களை உயர்த்திக் காட்ட முயல்கின்றனர் ஆதிக்கக் குடியினர்.

மனிதர்களில் சிலர் தெய்வீகத் தன்மைகள் கொண்டவர் என்றும் இறைவனுக்கு நெருக்கமானவர்கள் என்றும் கூறி உயர்வுபடுத்திக் காட்டுவது ஒருவகை.

**மனிதன் தெய்வமாவதில்லை தெய்வம் மனிதனாகப் பிறப்பதில்லை. இறைவனை நெருங்க எவரது உதவியும் பரிந்துரையும் அவசியமில்லை. பாவிகளும் இறைவனை நேரடியாக நெருங்கலாம் என்கிறது இஸ்லாம்.**

எனவே இஸ்லாமிய சமயத்தில் மதகுரு, புரோகிதர் ((Priesthood) என்ற பிரிவுகள் கிடையாது. தொழுகை நடத்துகின்றவர் இமாம் தலைவர் என்று அழைக்கப்படுகிறார். சமயத்தைக் கற்றவர் மார்க்க அறிஞர்கள் (உலமா) என்று அழைக்கப்படுவர். ஆன்மிக காரணங்களைக் காட்டி ஆதிக்கம் செலுத்தும் வழிகளை இஸ்லாம் அடைத்து விட்டது.

# சமத்துவத்தை நிலைநாட்டிய இஸ்லாம்

**● “ரோம் சாம்ராஜ்யமாகட்டும், பைஸாந்தியப் பேரரசாகட்டும், பராசீக சாம்ராஜ்யமாகட்டும். இந்தியப் பண்பாடே ஆகட்டும் இவை எல்லாவற்றிலும் சமூகத்தைப் பல்வேறு வகுப்புகளாகவும் சாதிகளாகவும் கூறு போட்டு பகுக்கின்ற அரக்கத்தனமான, கொடூரமான சட்டங்களே கோலோச்சின. இவற்றோடு ஒப்பிடும் போது இஸ்லாம் இவையெல்லாவற்றுக்கும் நேரெதிரே நின்றது. இஸ்லாம் சமத்துவத்தைத் தூக்கிப் பிடித்தது. இஸ்லாம் சகோதரத்துவத்தைக் கொண்டாடியது. அதற்கு நேர்மாறாக தொன்மையான, அதே சமயம் வீழ்ச்சிப் பாதையில் வேகமாக சரிந்து கொண்டிருந்த பண்டைய பண்பாடுகள் செழித்தோங்கியிருந்த நாடுகளில் சமத்துவமும் சகோதரத்துவமும் மறக்கடிக்கப்பட்டு இருந்தன என்பது தான் உண்மை.”**

**-எம்.என். ராய் (ஹிஸ்டாரிகல் ரோல் ஆ·ப் இஸ்லாம்) M.N.Roy, Historical Role of Islam**

# பூமியின் மீது நடமாடும் ஓர் சொர்க்கவாசி!

நபிகளாரின் திருச்சபை வழக்கம் போல, 'மஸ்ஜிதுன் நபவி'யில் கூடியிருந்தது. நபிகளாரின் அருளுரைகளைக் கேட்டு அவற்றைத் தங்கள் வாழ்வில் செயல்படுத்தத் தயாராய் நபித்தோழர்கள் அங்கு குழுமியிருந்தனர். அவர்களிடம் நபிகளார் சொன்னார்: "தோழர்களே, இப்போது சுவனவாசி ஒருவர், உங்கள் முன் வர இருக்கிறார் பாருங்கள்"

நபிகளாரின் மதிப்புக்குரிய அந்த மனிதரைப் பார்க்க நபித்தோழர்கள் ஆவலுடன் காத்திருக்க அங்கே மதீனாவாசியான அன்சாரித் தோழர் ஒருவர் வந்தார். தொழுவதற்குத் தயாராய் தாடியில் நீர் சொட்டச் சொட்ட, தனது செருப்புகளை சுமந்துகொண்டு அவர்களைக் கடந்து சென்றார்.

இரண்டாவது நாளும் அவர் அங்கே வந்தார். மூன்றாவது நாளும் இப்படியே நடந்தது. நபிகளாரும் சுவனவாசிக்குரிய அந்த அன்சாரியின் தோழரை முன்அறிவிப்பு செய்தார்.

மூன்று நாட்கள் கழிந்தன..

இதைக் கேட்டு அங்கு குழுமியிருந்த நபித்தோழர்களில் ஒருவரான அப்துல்லாஹ் பின் அம்ர் வியப்படைந்தார். நபிகளாரின் திருச்சபை கலைந்ததும், நபிகளாரால் சுவனவாசி என்று அறிவிக்கப்பட்ட அன்சாரி தோழரிடம் சென்றார். ஒரு மூன்று நாள் அவரோடு தங்கியிருக்க அனுமதி வேண்டினார். அவரும் அதற்குச் சம்மதித்தார்.

அன்சாரியின் தோழரோடு மூன்று நாட்கள் தங்கியிருந்த அப்துல்லாஹ் பின் அம்ர் எந்தவிதமான பிரத்யேக வணக்கமுறைகளையும் அவரிடம் காணவில்லை. எல்லாம் வழக்கம்போலவே இருக்கக் கண்டார். ஆனால், அவர் தூங்கச் செல்லும்போது, இறைவனை நினைவுகூர்ந்து தியானிப்பவராக இருந்தார். அதேபோல, யாரைக் குறித்தும் எவ்விதமான தீயவார்த்தைகளையும் அவர் கூறாமலிருப்பதையும் கண்டார். இப்படியே மூன்று நாட்களும் கழிந்தன.

வழக்கமான நடத்தைகள் கொண்ட ஒருவரை 'சுவனவாசி' என்று நபிகளார் முன்அறிவிப்பு செய்தது எப்படி? குழம்பித் தவித்த அப்துல்லாஹ் பின் அம்ர் தனது சந்தேகத்தை விடைபெறும்போது, அந்த அன்சாரி தோழரிடம் கேட்கவும் செய்தார்.

அதைக் கேட்ட அன்சாரி தோழர், புன்முறுவலுடன் சொன்னார்: "சகோதரரே! நீங்கள் மூன்று நாட்கள் என்னோடு தங்கியிருந்து கண்டது முழுக்க முழுக்க உண்மைதான்! அதே நேரத்தில் நீங்கள் காணாத ஒரு விஷயமும் இருக்கிறது. நான் யார் மீதும் குரோதம் கொள்வதில்லை. அதேபோல, பிறருக்கு இறைவனால் அருளப்படும் அருட்கொடைகளைக் கண்டு பொறாமைப்படுவதும் இல்லை!"

இந்த அருங்குணங்கள் பெற்றிருந்ததாலே அந்த அன்சாரி தோழர், சுவனவாசி என்று நபிகளாரால் முன்னறிவிப்பு செய்யப்பட்டார் என்பதை அப்துல்லாஹ் பின் அம்ர் புரிந்து கொண்டார்.

# சோதனைகள் எதிர்வரும் போது..

● "நிச்சயமாக நாம் உங்களை ஓரளவு அச்சத்தாலும், பசியாலும், பொருள்கள், உயிர்கள், விளைச்சல்கள் ஆகியவற்றின் இழப்பினாலும் சோதிப்போம். ஆனால் பொறுமையுடையோருக்கு (நபியே!) நீர் நன்மாராயங் கூறுவீராக! (திருக்குர்ஆன் 2:155)

● "(பொறுமை உடையோராகிய) அவர்களுக்குத் துன்பம் ஏற்படும் போது "நிச்சயமாக நாம் அல்லாஹ்வுக்கே உரியவர்கள், நிச்சயமாக நாம் அவனிடமே திரும்பிச் செல்வோம்" என்று கூறுவார்கள். இத்தகையோர் மீதுதான் அவர்களுடைய இறைவனின் நல்லாசியும், நற்கிருபையும் உண்டாகின்றன. இன்னும் இவர்கள் தாம் நேர் வழியை அடைந்தவர்கள்." (திருக்குர்ஆன் 2:156-157)

வாசகர்கள் கீழ்கண்ட முறைகளில் சந்தா அனுப்பலாம்:

1. வங்கி மூலம் :

House Of Peace, ICICI bank, Indra Nagar branch, Bangalore. Account no. 016901013432

IFScode: ICIC0000169

2. PAYTM மூலம் சந்தா செலுத்த: இங்கு காணப்படும் QR CODE ஐ SCAN செய்து உங்கள் தொகையை செலுத்தலாம். தொடர்ந்து 9845373775 என்ற எண்ணுக்கு உங்கள் சந்தா எண் மற்றும் தொகை குறிப்பிட்டு SMS மூலம் தகவல் அனுப்பவும்.

**திருக்குர்ஆன் தமிழாக்கம் அன்பளிப்புப் பிரதி பெற விரும்பும் மாற்றுமத அன்பர்கள் கீழ்கண்ட எண்களில் தொடர்பு கொள்ளவும்:**

சென்னை: 9941227866, 9894442844, 8122264467(மயிலாப்பூர்), 9840572018 (நுங்கம்பாக்கம்), 9087836393(தாம்பரம்), ஒசூர்: 9994713191 கிருஷ்ணகிரி: 9952862321 தர்மபுரி: 9842627171 கோவை: 9600800050 திருப்பூர்: 9150068919 குன்னூர்: 9843622246 ஊட்டி: 9843927014 ஈரோடு: 7373947869, 9942958888 உடுமலை: 9865051917 பழனி : 9894278528 பொள்ளாச்சி: 9843657426 சேலம்: 9994091364 திருச்சி: 8248709481, 9865446344 மதுரை: 9789341714 கும்பகோணம்: 9597285160 விழுப்புரம்: 9790290002 திருநெல்வேலி: 9786230030 தென்காசி : 9443695979 வேலூர்: 6382301984, 9600426150, 9994810734 திருவண்ணாமலை: 9994564650, 9944905212 தூத்துக்குடி: 8148059038 இளையான்குடி: 9842081210 ராஜபாளையம்: 7845033616 ராமநாதபுரம்: 7418140634 பாம்பன்: 9043758656 அதிராம்பட்டினம் 9566811099 கே.ஜி.எ.ஃப்: 9845217262

Printed, published &edited by A.Mohamed Kasim on behalf of House of Peace, No.501, 3rd cross, Syed Block, AS palya, Bangalore 560017 and printed at Print-O- Graph, Balaji complex, Sultanpet, Bangalore.
Registered News paper in India No. KARTAM/2007/28173

From
**House of Peace**
PO Box No. 1726
Bangalore 560 017

Registered news paper in India No. KARTAM/2007/28173
Registered under Postal Regn.No. KRNA/BGE/1057/2018-2020
Posted at Bangalore PSO, Mysore road, Bangalore 560026 on 25th or 26th or 27th of every month. No. of pages:24+4
Licenced to post without prepayment. Licence No.WPP-308
Date of Publication: 25th of every month

**(PRINTED MATTER)**

To

........................................................................................

........................................................................................

........................................................................................

........................................................................................

## சகோதரத்துவத்தை நடைமுறைப் படுத்திய மகான்!

● எந்த சகோதரத்துவ அடிப்படையில் புதிய உலகத்தை நிர்மாணிக்க வேண்டுமென்று இன்றைய நாகரிக உலகம் விரும்பி நிற்கிறதோ, அதே சகோதரத்துவத்தை அன்றைக்கே பாலைவனத்தில் ஒட்டகம் ஓட்டிக்கொண்டிருந்த மனிதரால் பிரச்சாரம் செய்யப்பட்டது. மேல்நாடுகள் எதையெல்லாம் புதிய கருத்துக்கள் என்றும் மகத்தான சாதனைகள் என்றும் கூறுகின்றனவோ, அவையெல்லாம் அந்த அரேபியாவின் பாலைவனச் சோலையிலே விதைக்கப்பெற்ற வித்துக்களின் விருட்சங்களேயன்றி அவற்றில் புதியது ஒன்றுமில்லை.

- கவிக்குயில் சரோஜினி நாயுடு-

● பிறப்பால் உயர்வு தாழ்வு போக்கி மனிதன் மனிதனாக வாழ வழி செய்த முஹம்மதைப் புகழ என்னிடம் வார்த்தைகள் கிடையாது.

- டாக்டர் அம்பேத்கர் -